விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 275 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 03 வியாழக்கிழமை (19.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## கற்கோவளம் கடலில்
## ஒருவர் நீரில் மூழ்கி மரணம் ஆசிரியர் ஒருவர் மாயம்




(பருத்தித்துறை)

வரலாற்றுச் சிறப்புமிக்க வல்லிபுரம் ஆழ்வார் ஆலய சமுத்திரத் தீர்த்தம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பருத்தித்துறை கற்கோவளக் 15

## வாகன விபத்து; இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்றிரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞரொருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-7)

## மாவிட்டபுரம், தையிட்டியில் மதுபானசாலை அமைக்க முயற்சி
### பொதுமக்கள் கடும் எதிர்ப்பு

(மாவிட்டபுரம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமியார் கோயில், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், தையிட்டி பிள்ளையார் மற்றும் வைரவர் ஆலயம் உள்ள இடத்தில் மதுபானசாலை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

புனித பிரதேசமாகப் பாதுகாக்கப்பட வேண்டிய மேற்படி இடத் 16

## சமூக ஊடகத்தில் வெளியான புலமைப்பரிசில் வினாத்தாள்
### பரீட்சைகள் திணைக்களத்துக்கு முன்பாக பெற்றோர் ஆர்ப்பாட்டம்
## 3 வினாக்களுக்கும் திறந்த மதிப்பெண்கள்
### பரீட்சைகள் ஆணையாளர்

3ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதித் தேர்தலில்
## சஜித்துக்கு இந்தியா அநுரவுக்கு சீனா ஆதரவு
### இந்திய ஊடகங்கள் பரபரப்புத் தகவல்




(கொழும்பு)

செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸவுக்கு இந்தியா ஆதரவு வழங்குவதாகவும் அநுர குமார திஸாநாயக்கவை சீனா ஆதரிப்பதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(02ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டையை ஒன்லைனில் பெறலாம்
### தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, வாக்காளர்கள் தங்களது வாக்காளர் அட்டையை பெற்றுக்கொள்வதற்கான ஒன்லைன் முறையை தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, வாக்காளர் அட்டையை https://eservices.elections.gov.lk/pages/home.aspx இணைப்பின் மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 15

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் எழுதிய கடிதம் சட்டத்துக்கு முரண்
### சுமந்திரன் எம்.பி காட்டம்



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கும் இடையிலான தொடர்பு தற்போது அம்பலமாகியுள்ளதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 15

## சுமந்திரன், சாணக்கியனால் எனக்கு உயிர் ஆபத்து இல்லை
### வேட்பாளர் அரியநேத்திரன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் போன்றவர்களால் தனக்கு உயிர் ஆபத்து ஏற்படாது எனத் தான் நம்புவதாகத் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். 15

## வாக்கெடுப்பு நிலையத்தில் நிழற்படம் எடுக்கத் தடை
### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் நிழற்படங்கள் எடுக்கவும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தவும் தேர்தல்கள் ஆணைக்குழு தடைவிதித்துள்ளது.

இது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 16

## ஓமந்தையில் விபத்து; இருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

ஓமந்தைப் பன்றிக்கெய்தகுளம் பகுதியில் இருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்த இருவர் ஓமந்தை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அண்மையில் சென்று கொண்டிருந்தபோது துவிச்சக் 15

## ஜனாதிபதித் தேர்தலில் இனவாதம் எடுபடவில்லை
### வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் இனவாதக் கருத்துக்கள் பெரிதாக இடம்பெறவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

பம்பலப்பிட்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்ட 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்தும் சேவைநயப்பும்





**திருமதி யசோதா முரளிதரன்**
(உப அதிபர்)
B.A, Dip in Edu SLTS - I

**சேவை விபரம்**

- கம்பஹா/ நீர் கொழும்பு தோப்பு தமிழ் வித்தியாலயம்
  20.01.1989 - 30.05.1995
- யாழ். கோப்பாய் மகாவித்தியாலயம்
  31.05.1995 - 16.09.2001
- யாழ். கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்
  17.09.2001 - 16.06.2010
- யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
  17.06.2010 - 18.02.2020
- யாழ். உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்
  19.02.2020 - 19.09.2024

(1913)

வாழ்த்துவோர்:- அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
யா/உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்

# தமிழ்ப் பொது வேட்பாளரை 2010 இல் நிறுத்தியிருக்க வேண்டும்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா கருத்து

2010ஆம் ஆண்டிலேயே தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்கியிருக்க வேண்டும் என முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசிய கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, மேலும் அவர் கூறுகையில், தமிழ்ப் பொதுக்கட்டமைப்பு சார்பில், தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்கியிருக்கிறார்கள், அதற்கு நான் நன்றி தெரிவிக்கின்றேன்.

பொதுவேட்பாளர் என்ற கருத்து 2010 ஆம் ஆண்டு கொண்டு வந்திருக்கப்பட வேண்டிய விடயமாகும்.



அந்தக் காலப்பகுதியில் தான் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை இடம் பெற்றது.

இந்நிலையில், 2010 ஆம் ஆண்டு இப்படி ஒரு நடவடிக்கை முன்னெடுத்திருந்தால் நாங்கள் ஆதரவு வழங்கியிருப்போம் எனக் கூறியுள்ளார். (ந-7)

# சஜித்திற்கு...

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் ஒரு நாள் எஞ்சியிருக்கும் நிலையில், ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருக்கிடையில் மும்முனைப் போட்டி உச்சமடைந்துள்ளது.

இந்நிலையில் இலங்கையின் ஜனாதிபதியாக சஜித் பிரேமதாஸ வெற்றி பெற வேண்டுமென்பதில் இந்தியா அதி தீவிர கருசனை கொண்டுள்ளதாகவும்,

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்கவுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்பதில் சீனா தீவிரம் காட்டுவதாகவும் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சீனாவும், இந்தியாவும் தமக்குச் சாதகமான ஜனாதிபதி ஒருவரை உருவாக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகச் சர்வதேச அரசியல் ஆய்வாளர்களும் தமது கருத்துகளை ஏற்கனவே பகிர்ந்திருந்தனர்.

தேர்தல் நெருங்கியுள்ள நிலையில் தமக்கு சாதகமான ஜனாதிபதியை உருவாக்கும் முயற்சியில் இந்த இரண்டு நாடுகளும் தொடர்ந்து தீவிர பணியாற்றி வருவதாகவும் பல்வேறு வகையில் அவர்களுக்கான உதவிகளை இந்த நாடுகள் வழங்கி வருவதாகவும் இராஜதந்திர மட்டத்தில் பேசப்படுகிறது. (ந-7)

# 5 ஆம் ஆண்டு நினைவாக

## அமரர் நகுலேஸ்வரன் யோகரஞ்சினி (சுமதி)

பிறப்பு
26.01.1967

இறப்பு
19.09.2019





கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
என்றுமே உயிர்வாழும்
மண்விட்டு மறைந்த நீங்கள்
விண்நோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
எந்நாளும் எம் மனதில் வாழ்வீர்கள்

“ சுமதி இல்லம் ”
மூத்த விநாயகர் கோவிலடி,
பொன்னம்பல வித்தியாலய வீதி, நெல்லியடி, [illegible]

குடும்பத்தினர்

(C-1210)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்களித்தவுடன் உடனடியாக வீடுகளுக்குச் செல்லுங்கள்

## மக்களுக்கு தேர்தல் ஆணைக்குழு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

**எதிர்வரும் சனிக்கிழமை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்த பின்னர் உடனடியாக வீடுகளுக்குச் செல்லுமாறும், நாட்டு மக்களிடம் தேர்தல் ஆணைக்குழு கேட்டுள்ளது.**



காரணமின்றி வாக்குச் சாவடிகளில் அல்லது அருகில் இருக்க வேண்டாம் என்றும் வாக்காளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.


எந்தவொரு சந்தர்ப்பத்தில் தேர்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்துவோருக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க எச்சரித்துள்ளார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு கையடக்க தொலைபேசிகளை எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

வாக்களித்ததன் பின்னர் யாருக்கு வாக்களித்தீர்கள் என்பதை பகிரங்கமாக சொன்னால், அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்றும் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தவிசாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் தயார் நிலையில் உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## 40 அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு- சுகாதார அமைச்சு



(கொழும்பு)

வைத்தியசாலைகளுக்குத் தேவையான 40 அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் இந்த நாட்டில் உள்ள வைத்தியசாலைகளில் சுமார் 300 வகையான மருந்துகளுக்குத் தட்டுப்பாடு காணப்பட்ட போதிலும் இதுவரையில் அவை விநியோகிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலைமையின் அடிப்படையில், வெளிப்படையான முறையில் கடுமையான விதிமுறைகளுக்கு உட்பட்டு, நிபந்தனைகளுக்கு உட்பட்டு, தொடர்ந்தும் வைத்தியசாலைகளுக்கு மருந்துகள் வழங்கப்படும் எனச் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஜி.விஜேசூரிய தெரிவித்துள்ளார். (நி)

## 3 வினாக்களுக்கு திறந்த மதிப்பெண்கள்

### பரீட்சை ஆணையாளர்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் வினாத்தாள் சமூக ஊடகங்களில் பரவியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் விசேட விசாரணை நடத்தப்பட்டதாகவும், பரீட்சை இரத்து செய்யப்படமாட்டாது எனவும் பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு புலமைப்பரிசில் வினாத்தாளில் இருந்து மூன்று வினாக்களை நீக்கி அனைத்து மாணவர்களுக்கும் அந்த மூன்று வினாக்களின் மதிப்பெண்களைச் சமமாக வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் குறித்த வினாத்தாள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டதாக இதுவரை தெரியவரவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில், நேற்று முன்தினம் காலை வினாத்தாளை தயாரித்து அதிகாரிகள் சபையுடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார். (நி)

## பரீட்சைத் திணைக்களத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம்

# கலகத் தடுப்புப் பிரிவினர் அழைப்பு

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் முதலாம் வினாத் தாளில் இருந்து 3 வினாக் களை நீக்கி இறுதிப் புள்ளிகளை கணக்கிடுவதற்காகப் பரீட்சை திணைக்களம் எடுத்துள்ள தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து தற்போது பெற்றோர்கள், பரீட்சை திணைக்களத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை இரத்துச் செய்யுமாறும் அவர்கள் கோரிக்கை விடுப்பதுடன் பெற்றோர்கள் சிலர், பரீட்சை திணைக்களத்திற்குள் சென்று கடிதம் ஒன்றையும் வழங்கியுள்ளனர்.

அத்துடன் பெற்றோர்கள் தொடர்ந்தும் போராட்டம் நடத்தி வருவதாகவும், பொலிஸாரும் கலகத்தடுப்புப் பிரிவினரும் அந்த இடத்திற்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும் வினாத்தாள் தயாரித்த குழுவின் இணக்கப்பாட்டுடன் தொடர்புடைய 3 வினாக்களை நீக்கி இறுதி புள்ளிகளை வழங்க பரீட்சை திணைக்களம் நேற்று முன்தினம் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## இந்தியா – பங்களாதேஷ் டெஸ்ட் தொடர் இன்று

### ஒன்று சேர்ந்த கம்பீர், கோலி



இந்தியா- பங்களாதேஷ் அணிகளுக்கு இடையேயான முதல் டெஸ்ட் போட்டி இன்று சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற உள்ளது. இந்த போட்டிக்காக இரு அணி வீரர்களும் தீவிர வலை பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தத் தொடர் இந்திய பயிற்சியாளராக கவுதம் கம்பீருக்கு முதல் டெஸ்ட் தொடராகும்.

இந்நிலையில் போட்டிக்கு முன்னதாக கம்பீர் மற்றும் கோலி கலகலப்பான நேர்காணலில் பங்கேற்றுள்ளனர். இவர்கள் இருவரும், ஐ.பி.எல் தொடரின் போது பலமுறை வாக்கு வாதங்களில் ஒருவருக்கொருவர் மோதி கொண்டதை காணலாம்.

ஆனால் தற்போது ஒரே அணியில் பயிற்சியாளராக கம்பீர் மற்றும் வீரராக விராட் கோலி இந்திய அணியில் ஒன்றாக செயற்பட்டு வருகின்றனர்.

இருவரும் பயிற்சியின் போது சகஜமாக பேசிக்கொள்ளும் வீடியோ மற்றும் புகைப் படம் சமூக வலைதளங்களில் பரவி ரசிகர்களிடையே ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

இந்நிலையில் களத்தில் தகராறில் ஈடுபடுவது குறித்து பயிற்சியாளர் கவுதம் கம்பீர் மற்றும் விராட் கோலி கல கலப் பாக பேசியுள்ளனர். இதனை பிசிசிஐ தனது அதிகாரப்பூர்வ சமூக வலைத்தளங்களில் வெளியிட்டுள்ளது. (6)

## ஒரே போட்டியில் 9 கோல்கள்

### பேயர்ன் முனிச் அணி சாதனை



மொடன் சம்பியன்ஸ் லீக்கில் ஒரு ஆட்டத்தில் ஒன்பது கோல்களை அடித்த முதல் அணியாக பேயர்ன் முனிச் ஆனது.

ஐரோப்பாவின் எலைட் கிளப் போட்டியின் புதிய வடிவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது.


ஜேர்மனியின் அலையன்ஸ் அரங்கில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் பேயர்ன் முனிச் அணியானது குரோஷிய சம்பியனான டினாமோ ஜாக்ரெப்பை 9-2 என்ற கணக்கில் தோற்கடித்தார்.

போட்டியில், ஹரி கேன் மூன்று பெனால்டிகள் உட்பட நான்கு கோல்களை அடித்தார். ஒரு சம்பியன்ஸ் லீக் போட்டியில் ஒரு அணியால் அதிக கோல்கள் அடிக்கப்பட்ட சந்தர்ப்பம் இதுவாகும்.

2020 ஒகஸ்ட் 14 அன்று நடைபெற்ற 2019-20 UEFA சம்பியன்ஸ் லீக் காலிறுதியில் பார்சிலோனாவை 8-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்திய போது, பேயர்ன் சம்பியன்ஸ் லீக் போட்டியில் எட்டு கோல்கள் அடித்த இறுதி அணியாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (6)

## இங்கிலாந்துக்கு எதிரான போட்டி

### ஆஸியில் மாற்று வீரர்களாக இருவர்




அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. 3 போட்டி கொண்ட 20 ஓவர் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

அடுத்து இரு அணிகள் இடையே 5 போட்டி கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற உள்ளது. முதல் ஒருநாள் போட்டி நாட்டிகாமில் இன்று ஆரம்பமாகிறது.

ஒருநாள் தொடரில் இரு அணிகளும் ஆதிக்கம் செலுத்த முயற்சிக்கும். இதனால் இந்த தொடர் விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒருநாள் தொடருக்கான அவுஸ்திரேலிய அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில் அவுஸ்திரேலிய அணியில் 2 வீரர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளனர். கூப்பர் கன்னோலி கூடுதல் வீரராகவும், 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் வேகப் பந்து வீச்சாளர் மஹில் பியர்ட்மேன் மாற்று வீரராகவும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

19 வயதுக்குட்பட்ட உலகக் கோப்பையில் இந்தியாவுக்கு எதிரான இறுதிப்போட்டியில் பியர்ட்மேன் சிறப்பாக பந்து வீசி 15 ரன் கொடுத்து 3 விக்கெட்டுகளை கைப்பற்றி இருந்தார். 19 வயதான அவர் 6 அடி 2 அங்குலம் உயரம் கொண்டவர் ஆவார்.

வேகப் பந்துவீச்சாளர்களான சேவியர் பார்ட்லெட், நாதன் எல்லிஸ், மெரிடித் மற்றும் ஸ்பென்ஸர் ஜான்சன் ஆகியோர் காயம் காரணமாக ஒருநாள் போட்டிக்கான அணியில் இடம்பெறவில்லை. இந்த சூழலில் தற்போது கன்னோலி, பியர்ட்மேன் ஆகிய இருவரும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## மகளிர் 'ரி-20' தொடர்

### பரிசுத் தொகை ரூ.19.6 கோடி



மகளீர் "ரி-20" உலகக் கோப்பை வெல்லும் அணிக்கு ரூ. 19.6 கோடி பரிசுத் தொகை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே மகளீர் "ரி-20" உலகக் கோப்பை தொடருக்கான பரிசுத் தொகை விவரம் நேற்று முன்தினம் வெளியானது. மொத்த பரிசுத் தொகை கடந்த ஆண்டினை விட அதிகரிக்கப்பட் டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி) சார்பில் மகளீருக்கான "ரி-20" உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் ஒக்டோபர் 3 -20 ஐக்கிய அரபு எமிரேட்சில் நடக்க உள்ளது.

10 அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு போட்டி லீக் முறையில் நடக்கும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடம் பெறும் அணிகள் அரையிறுதிக்கு செல் லும். 22 போட்டி முடிவில், ஒக் டோபர் 20 இல் துபாயில் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது.

ஏ இந்திய அணி அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாகிஸ்தான், இலங்கை அணிகளுடன் இடம் பெற்றுள்ளது. தனது முதல் போட்டியில் இந்திய அணி, ஒக்டோபர் 4 இல் நியூசிலாந்தையும் ஒக்டோபர் 6 ஆம் திகதி பாகிஸ்தானுடன் மோதுகிறது.

கோப்பை வெல்லும் மகளீர் அணிக்கு ரூ. 19.6 கோடி தரப்பட உள்ளது. 2023 இல் சம்பியன் ஆன அவுஸ்திரேலிய மகளீர் அணிக்கு ரூ. 8.4 கோடி தரப்பட்டு இருந்தது.

இரண்டாவது இடம் பெறும் அணி ரூ. 10 கோடி பெறும். அரையிறுதியில் தோற்கும் இரு அணிகளுக்கு தலா ரூ. 5.7 கோடி கிடைக்கும்.

தவிர லீக் சுற்றில் பெறும் ஒவ்வொரு வெற்றிக்கும் ரூ. 26 லட்சம் தரப்படும். அரையிறுதிக்கு முன்னேறாத 6 அணிகள், பெறும் இடத்துக்கு ஏற்ப, ரூ. 11.3 கோடி பிரித்து வழங்கப்படும். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி

## சபைக்குச் சொந்தமான கடைகளை 05.10.2024-04.10.2025 காலப்பகுதிக்கு தற்காலிகமாக மாதாந்த வாடகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி கோரல்

சபைக்குச் சொந்தமான கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கடைகளை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு அமைவாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரம் வழங்கும் காலப்பகுதி : 19.09.2024 - 02.10.2024 ஆம் திகதி பி.ப 3.00 மணிக்கு பிந்தாமல்
கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 03.10.2024 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிந்தாமல்
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 03.10.2024 ஆம் திகதி மு.ப. 10.15 மணிக்கு
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : பொது மண்டபம், தலைமை அலுவலகம்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை

1. வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை கடைகளுக்கான கேள்வி அறிவித்தல் 14.11.2023, 17.01.2024 ஆம் திகதிய வலம்புரி, தினக்குரல் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக மீள கேள்விகள் கோரப்படுகின்றன.
2. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
3. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழின் மூலப் பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும்.
4. உரிய உப அலுவலகம் அல்லது தலைமை அலுவலகத்தில் மேலதிக விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

| தொ. இல | கடை விபரம் | ஆகக் குறைந்த மாத வாடகை தொகை (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (VAT,NBT நீங்கலாக) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | |
| 1 | நெல்லியடி நவீன சந்தை கடை இல - 12 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 2 | நெல்லியடி நவீன சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல் தள கடை இல UF - 19 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 3 | நெல்லியடி நவீன சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல் தள கடை இல UF - 20 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 4 | நெல்லியடி நவீன சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல் தள கடை இல UF - 21 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| 5 | நெல்லியடி நவீன சந்தை வளாகத்தில் அமைந்துள்ள மேல் தள கடை இல UF - 27 | 4,000.00 | 750.00 | 2,000.00 |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | |
| 6 | சாண்டா சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கீழ் தள கடை இல - 03 | 4,000.00 | 750.00 | 2,000.00 |

தொடர்புக்கான தொலைபேசி இல:

தலைமை அலுவலகம் : 021 226 3271
நெல்லியடி உப அலுவலகம் : 021 226 1234
உடுப்பிட்டி உப அலுவலகம் : 021 226 1336
கடமை நேரம் மு.ப. 8.30 - பி.ப. 16.15 வரை

கணேசன் கம்ஸநாதன்
செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

(சி-1207)

# மஹியங்கனை விபத்தில் குழந்தை உயிரிழப்பு

(மஹியங்கனை)

பொலன்னறுவை - மஹியங்கனை வீதியில் லத்பந்துர சந்தியில் இடம்பெற்ற விபத்தில் ஒன்றரை வயது குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

பொலன்னறுவையில் இருந்து மஹியங்கனை நோக்கி பயணித்த வான் வீதியை விட்டு விலகி எதிர் திசையில் வந்த முச்சக்கரவண்டியுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் படுகாயமடைந்த குழந்தை, அவரது சகோதரர், தாய் மற்றும் முச்சக்கரவண்டியை ஓட்டிச் சென்ற நபர் ஆகியோர் தெஹியத்தகண்டிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்நிலையில் குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விபத்து தொடர்பில் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வானில் பயணித்த ஒருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# வெல்லவாயவில் தீப் பரவல்

(கொழும்பு)

வெல்லவாய பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிரிய கொல்ல காட்டுப்பகுதியில் ஏற்பட்ட தீப் பரவல் கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தத் தீப்பரவல் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஏற்பட்டுள்ளது.

இரவு முழுவதும் தீ பரவியதால், காட்டுப்பகுதியின் பத்து ஏக்கர் நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

கடும் வறட்சி மற்றும் காற்றுடன் கூடிய வானிலை காரணமாக இந்தத் தீப்பரவல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று புதன்கிழமை காலை இந்த தீ முற்றாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

19.09.2024
புரட்டாதி 03, வியாழக்கிழமை
பிரதமை காலை 6.48 மணிவரை

துதியை பின்னிரவு 4.24 மணிவரை
உத்திரட்டாதி முற்பகல் 11.23 மணிவரை
சுபநேரம் 7.33-9.03 மணிவரை
இராகுகாலம் 1.33-3.03 மணிவரை

சந்திராஷ்டமம்-
ஆயிலியம், மகம்

வளவன்




தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், சயனசுகக் குறைவுண்டு.




பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.




சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலன் சீராகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.




சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம்.




பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பொருளாதார நலனில் அக்கறை கூடும், போசன சுகமுண்டு.




வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.




திட்டமிட்ட காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், தொழில் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், நட்பு வட்டம் விரிவடையும் நாள், பாகப் பிரிவினைகள் சுமூகமாக முடியும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும் நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு.

அறிந்து செய்கிற பாவத்தை அழுது அழுது தொலைக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற மாதிரி விவாதம் சம்பியனான யாழ்.இந்து



(யாழ்ப்பாணம்)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டு கடந்த சனிக்கிழமை கொழும்பு பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான பாராளுமன்ற மாதிரி விவாதச் சுற்றுப் போட்டியில் அரையிறுதியில் கொழும்பு றோயல் கல்லூரியையும், இறுதிப்போட்டியில் கொழும்பு இந்துக் கல்லூரியையும் எதிர்கொண்டு யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றுள்ளது.

உயர்தரப் பிரிவு மாணவர்களான ஜெயபாலன் தவேதன், இந்திரஜிற் கார்த்திகன், மகேந்திரன் திகழ்ஒளிபவன், ரவீந்திரன் ரேகிஷன் ஆகியோர் யாழ்.இந்துக் கல்லூரி அணி சார்பாகப் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6)

# கடலுக்கு சென்ற முதியவர் மாயம்

## பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)


யாழில் கடற்றொழிலுக்கு சென்ற முதியவரை காணவில்லை என ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.


காரைநகரைச் சேர்ந்த முருகேசு விநாயகமூர்த்தி (வயது 74) என்பவரே காணாமல் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் இருந்து கடற்றொழிலுக்காக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை சென்றவர் மாலை வரையில் வீடு திரும்பாத நிலையில் வீட்டார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்நிலையில் முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(6-33)

# வல்லிபுர ஆழ்வாரின் சமுத்திர தீர்த்தோற்சவம்





(கரணவாய்)

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய சமுத்திர தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் மாலை கற்கோவளம் கடற்கரையில் பக்திபூர்வமாக இடம்பெற்றது.

இதன்போது பல அடியவர்கள் கலந்து கொண்டு தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றியிருந்தனர்.

வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய மஹோற்சவம் கடந்த 2 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-60-33)

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை

## ஆதன மதிப்பீட்டு ஏடு காட்சிப்படுத்தல் மற்றும் ஆட்சேபனை தெரிவித்தல்

1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆவது மற்றும் 141(3) ஆவது பிரிவுகளின் கீழ் பிரதேசசபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின் பிரகாரம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை நிர்வாக எல்லைக்குள் அமைந்துள்ள பளைநகர வட்டாரத்திற்கான (பளைநகரம், புலோப்பளை மேற்கு, கச்சார்வெளி) அனைத்து வதிவிட, வர்த்தக கட்டடங்கள், காணிகள், வீடுகள் போன்ற நிலையான சொத்துக்களின் வருடாந்த மதிப்பை பதிவு செய்துள்ள மதிப்பீட்டு ஏடானது 20.09.2024 ஆம் திகதி தொடக்கம் 20.10.2024 வரையான அலுவலக நாட்களில் மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 4.00 வரையான காலப்பகுதியில் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் கட்டணங்கள் எதுவுமின்றி பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

குறித்த ஆதனங்களின் வருடாந்த மதிப்பீடு தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை இருப்பின் குறித்த கால எல்லைக்குள் செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைத்தல் அல்லது அலுவலக நாட்களில் மு.ப 8.30 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரையிலான காலத்தினுள் நேரடியாக சமர்ப்பிக்க முடியும் என்பதனையும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் ஆட்சேபனைகள் யாவும் நிராகரிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134(1) உபபிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரமும் ஆதனங்களின் வருடாந்த மதிப்பின் பிரகாரமும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பளைநகர வட்டாரத்தில் அமைந்துள்ள ஒவ்வொரு அசையா சொத்தின் ஆண்டுப்பெறுமதியில் 4% இனை வீடுகளிற்கும், 5% இனை வர்த்தகக்கட்டடங்களுக்கும் வருடாந்த வரியாக விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த வட்டார ஆதனங்களின் மதிப்பீட்டு ஏட்டில் வருடாந்த மதிப்பீடு தொடர்பான விபரங்களை பார்வையிடுவதற்கு காணியின் உரிமையாளருக்கு அல்லது சட்டபூர்வமான குடியிருப்பாளருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் என்பதனை விசேடமாக தெரிவிப்பதுடன் மதிப்பீட்டு பதிவேட்டை பார்வையிடுவதற்காக வருவோர் தத்தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவது கட்டாயமாகவும் கருதப்படுகிறது. மேலும் ஆதனவரி அறவீடு தொடர்பான மேலதிக தகவல்களை பச்சிலைப்பள்ளி தலைமையலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ளமுடியும்.

குறிப்பு:- பளைநகர வட்டாரத்தில் அமைந்துள்ள அனைத்து ஆதன உரிமையாளர்கள் அல்லது பராமரிப்பாளர்கள் தங்கள் ஆதனங்களுக்கான உறுதி, 30வருட தோம்பு, மற்றும் நிலஅளவைப்படம், அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகளை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் எதிர்வரும் 20.10.2024 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**த.தர்சினி,**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(அ-1208)

# காயத்திரி மந்திர மஹாயக்ஞம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 100 ஆவது அவ தார தினத்தை முன்னிட்டு காயத் திரி மஹா மந்திர மஹாயக்ஞம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணிவரை நல்லூர், சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள யாழ்.மத்தி ஸ்ரீ சத்ய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் வேத விற்பன்னர் ஸ்ரீ வேத நாராயணன் கலந்து கொண்டு இந்த மஹாயக்ஞத்தை நடத்தவுள்ளார். (6)

# கூரையை பிரித்து பணம் கொள்ளையடிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் சிற்றுண்டிச்சாலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு பணம் திருட்டுப் போயிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

சிற்றுண்டிச்சாலையின் மேற்கூரையைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த 7இலட்சத்து 75ஆயிரம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் தமக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (6-30)



யாழ்.வை.எம்.சீ.ஏ யின் முன்னாள் தலைவர் சி.இ.ஆனந்தராஜன் ஞாபகார்த்த மேசைப் பந்தாட்ட சுற்றுப்போட்டி அண்மையில் இடம்பெற்று இருந்தது. இதில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.ராஜசீலன், யாழ்.வலய கல்வி திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.சாரங்கன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து சில்லுக்குள் சிக்கி பெண் பரிதாப மரணம்

(கொழும்பு)

பேருந்து சில்லுக்குள் சிக்கி பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




இந்த விபத்து நேற்று புதன்கிழமை அதிகாலை நாவல முல்ல - மீகொடை வீதியில் சிரிமெதுரவத்த பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மீகொடதெனிய பிரதேசத் தைச் சேர்ந்த 57 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

இவர் மற்றுமொரு நபருடன் சேர்ந்து தனியார் பேருந்து ஒன்றில் ஏறுவதற்கு முயன்ற போது பேருந்தின் மிதிபலகையிலிருந்து தவறி வீழ்ந்து பேருந்தின் சில்லுக்குள் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் இதனையடுத்து விபத்தினை ஏற்படுத்திய பேருந்தின் சாரதி வேகமாக பேருந்தினை செலுத்தி சம்பவ இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொடை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி)


## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 2000 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
12 இல் சூரி செவ்
கி.பா: 46
உயரம்: 5'10"
தகைமை/தொழில்: A/L, Telecom Engineering, Commerce Teacher
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/14782

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 33
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Own Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/14783

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்: மகம்
4 இல் சூரி செவ்
கி.பா: 32
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MBBS,Doctor
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
விவாகரத்தானவர்
தொ.இ: B/14785

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 6 1/2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர்
தொ.இ: G/14734

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: அனுஷம்
4 இல் செவ்
கி.பா: 36 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: HND IT, Software Engineer
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/14740

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
1 இல் செவ்
உயரம் :5'5"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது உள்நாடு
தொ.இ: G/14745

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

**வைத்தியம்**
வலிப்பு நோய் | கை விறைப்பு |
கழுத்து வலி | கால் பாத விறைப்பு |
முள்ளந்தண்டு வலி | முழங்கால் வலி
Sciatica | நாட்பட்ட சளி |
தலைக்கு இரத்தம் போகாமை
அதி விசேட மூலிகை, Acu சிகிச்சைகள்
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(c-2437)

## பல ஆயிரம் கடந்த பதிவுகள்

ஆயிரத்திற்கு மேற்பட்ட திருமணங்களைப் பொருத்திய சாதனை...
உங்கள்
கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :-
கல்யாண மாலை
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
021 720 1005
Email : kalyanamalai.jaffna@gmail.com


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## உப அலுவலகம்-தெல்லிப்பளை

**விண்ணப்பதாரர்** - இராசையா ஜெயரூபன் மனைவி திருமகள்
**முகவரி** - இல 50/50, நாமகள் வீதி. தெல்லிப்பளை

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தெல்லிப்பளை உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 17, நாமகள் வீதியில் இவ் ஆதனம் அமைந்துள்ளது.

குறித்த ஆதனமானது 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் திகதி, பிரசித்த நொத்தாரிஸ் சி.விஸ்வலிங்கம் முகதாவில் 4553ஆம் இலக்கத்தில் முடிந்த அறுதி உறுதிப்படி **இராசையா ஜெயரூபன் மனைவி திருமகள்** என்பவரை வந்தடைந்தது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் வடக்கு பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை கிழக்கு இறை கிள்ளானை நிலப்பரப்பு 4 இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் க.எஸ்.மகாலிங்கம் அவர்களால் வரையப்பட்ட 282/30.06.2020 ஆம் இலக்க வரைபடத்தின்படி துண்டு 01 நில.பர 3 குளி 17.26 ஆக காட்டப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்

கிழக்கு-12 அடி அகலம் கொண்ட இக்காணியின் மேற்கு எல்லைக்குரிய பாதை ஆதனம்
வடக்கு-இராசா சிவராசாவுக்கும் மனைவி தவமலருக்கும் உரிய ஆதனம்
மேற்கு-மிகுதி ஆதனம்
தெற்கு-பாஸ்கரன் பெண் சந்திராதேவி ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை **இராசையா ஜெயரூபன் மனைவி திருமகள்** எனும் பெயரில் பெயர் மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு பெயர்மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேசசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(1971)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்



## பழம்பெரும் நடிகை
### சி.ஐ.டி சகுந்தலா காலமானார்


(டில்லி)

பழம்பெரும் நடிகையான 'சி.ஐ.டி சகுந்தலா மாரடைப்பு காரணமாக தனது 85 ஆவது வயதில் நேற்று முன் தினம் உயிரிழந்தார்.

பின்னணி நடனக் கலைஞராக சினிமாவில் கால் பதித்த நடிகை சகுந் தலா, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடத்திரையுலகில் 600 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார்.

அவர் நடித்த நேதாஜி (1996), நான் வணங்கும் தெய்வம் (1963), கை கொடுத்த தெய்வம் (1964) உள்ளிட்ட படங்கள் ரசிகர் களின் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி)

## சிறந்த பறவைக்கான விருது
### நியூசிலாந்தின் பென்குயின் தேர்வு



(வெலிங்டன்)

2024 ஆம் ஆண்டிற் கான சிறந்த பறவைக்கான விருதை நியூசிலாந்து நாட் டின் மஞ்சள் கண் பென் குயின் தட்டிச்சென்றது.

மஞ்சள் கண் பென் குயின், அல்லது ஹைஹோ எனச் சொல்லப்படும், இந்த பென்குயின் 6,328 ஓட் டுக்கள் பெற்று இரண்டாவது முறை வெற்றிபெற்றுள்ளது. ஆண்டுதோறும், நடை பெறும் போட்டியில் இம் முறை பெற்ற வெற்றியோடு வெற்றிக்கணக்கை இரண் டாக உயர்த்தியது.

வனத்துறை, பறவை பாதுகாப்புச் சங்க அமைப்பா ளர்களால் உலகின் அரிதான பென்குயின் இனமாகக் கரு தப்படும் ஹைஹோ, கூச்ச சுபாவம் கொண்டதாக அறி யப்படுகிறது.

இரண்டாம் இடத்தைப் பிடித்த சாதம்தீவு பிளாக் ராபின் மற்றும் ககாபோவை அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி கொண்டது. ஆன் லைன் போட்டியின் இறுதி வாரத்தில் குறிப்பிடத்தக்க மக்கள் ஆதரவை இந்த பறவை பெற்றது.

195 நாடுகளில் இருந்து அதிகம் பேர் ஓட்டுப்போட்டு ஹைஹோவை சிறந்த பற வையாகத் தேர்ந்தெடுத்துள் ளனர். இந்தப் போட்டியில் 52, 500 வாக்குகள் பதி வாகின. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு, போட்டி மிகவும் குறைவாக இருந் தது. நியூசிலாந்தை சேர்ந்த ஹைஹோ இனம் 4,000 முதல் 5,000 என்ற எண் ணிக்கையில் மட்டுமே உள்ளது.

இதற்கு முன், 2019 இல் சத்தமாக கத்துவது என அறியப்பட்ட பென்குயினான மவோரி, வெற்றி பெற்றி ருந்தது. (நி)

## மலைப்பாம்புகளுடன்
### பிறந்த நாள் கொண்டாட்டம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வன விலங்குகள் அருங்காட்சி யகத்தை நடத்தி வருபவர், மலைப்பாம்புகளுடன் சேர் ந்து பிறந்த நாள் கொண் டாடிய வீடியோ மற்றும் புகைப் படம் சமூக வலைதளங் களில் வைரலாகி உள்ளது.

உலகில் பெரும்பாலான மக்கள் தங்களது பிறந்த நாளை, குடும்பத்தினர், நண் பர்கள், உற்றார், உறவினர் களுடன் சேர்ந்து கொண் டாடுவது வழக்கம். ஒரு சிலர் அன்றைய தினம் வெளியூர், வெளிநாட்டிற்கும் சென்று வருவர். இன்னும் சிலர் அன்றைய நாளை ஏதாவது வித்தியாசமாகச் செய்வர்கள். அந்த வகையில் ஒரு நிகழ்வு அமெரிக்காவில் அரங்கேறி உள்ளது.

அமெரிக்காவின் கலிபோர் னியாவின் "தி ரெப்டைல் ஜூ" என்ற விலங்குகள் அருங் காட்சியகம் உள்ளது. இதனை, ஜே பிரேவர் என் பவர் தோற்றுவித்து நிர்வ கித்து வருகிறார். அவர், தனது பிறந்த நாளை மலைப் பாம்புகளுடன் சேர்ந்து கொண்டாடிய படம் மற்றும் வீடியோக்களை சமூக வலை தளங்களில் பகிர்ந்துள் ளார்.

அத்துடன் அவர் வெளி யிட்ட பதிவில் கூறியுள்ள தாவது: இது ஒரு பாம்பு விருந்து. இன்று எனது பிறந்த நாள். நான் காட்டிய அன்பு மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இதனை எனது நண்பர்கள் காரணமாக உருவானது எனக்கூறியுள்ளார். இந்த வீடியோ சமூக வலை தளங் களில் வைரலானது. இது வரை, 7.4 லட்சம் பார்வை களையும், 10 ஆயிரம் விருப் பங்களையும் பெற்றுள் ளது. (நி)



# லெபன
# வெ

➤ 9 பேர் உ

➤ 3000 பே


➤ உலக நா

(பெய்ரூட்)

**லெபனான் தலைநக பல பகுதிகளில் குண் வங்கள் பதிவாகியுள வெடிப்பு சம்பவங்க முந்துள்ளதுடன் 3000 துள்ளதாகவும் வெளி கங்கள் தகவல் வெள**



## முதியவர்களின் நாடாகும் ஜப்பான்



(டோக்கியோ)

ஜப்பானில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர் களின் எண்ணிக்கை முதல் முறையாக 3.62 கோடியாக அதிகரித்து புதிய சாதனை படைத்துள்ளது.

ஜப்பானில் பெரும்பாலா னோர் குழந்தை பெற்றுக் கொள்ள விரும்பாததால் நாளு க்கு நாள் மக்கள் தொகை குறைந்து கொண்டு போகிறது. இதனை மாற்ற அரசு எவ்வ ளவோ முயற்சி செய்தும் எந்த பலனும் கிடைக்கவில்லை. முதியவர்கள் அதிகம் வசிக் கும் நாடாகவும் மாறி வரு கிறது. இந்நிலையில் ஜப்பா னின் உள்நாட்டு விவகாரத் துறை அமைச்சகம் வெளி யிட்ட அறிக்கையில் கூறியுள் ளதாவது: இதுவரை இல்லாத வகையில் இந்தாண்டு, 65 வயதுக்கு மேற்பட்ட ஜப்பா னியர்களின் எண்ணிக்கை 3,62,50,000 ஆக அதிக ரித்து உள்ளது. இது மொத்த மக்கள் தொகையில் 29.3 சதவீதம் ஆகும்.

ஒரு லட்சத்திற்கும் மேற் பட்ட முதியவர்கள் வசிக்கும் 200 நாடுகளில் ஜப்பான் முத லிடத்தில் உள்ளது.

இந்தப் பட்டியலில், இத்தாலி, போரத்துக்கல், கிரீஸ், பின் லாந்து, ஜேர்மனி மற்றும் குரே ஷியா ஆகிய நாடுகள் முதல் 10 இடங்களுக்குள் உள்ளன. இந் நாடுகளில் வசிக்கும் முதியவர் களின் எண்ணிக்கை 20 சத வீதம் ஆகும்.

தென் கொரியாவில் 19.3 சதவீதம் மற்றும் சீனாவில் 14.7 சதவீதம் முதியவர்கள் வாழ்கின்றனர். (நி)


## 27 நாடுகள
### புதிய வகை



எக்ஸ். இ. சி. புதிய வகை கொரோனா தொற்று த போது 27 நாடுகளில் பர யுள்ளது என வெளிநாட் ஊடகங்கள் செய்தி வெ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...னானில் ஒரே நேரத்தில் ...டித்த 'பேஜர்கள்'




## ... உயிரிழப்பு
## ...0 பேர் படுகாயம்
## ...நாடுகள் அதிர்ச்சியில்

**...லைநகர் பெய்ரூட் உட்பட ... குண்டுவெடிப்புச் சம்ப...கியுள்ளன.இக் குண்டு...ங்களில் 9 பேர் உயிரி...3000 பேர் படுகாயமடைந்...வெளிநாட்டு செய்தி ஊட... வெளியிட்டுள்ளன.**




லைபனான் நாட்டில் இருந்து கொண்டு இஸ்ரேலுக்கு எதிராக செயற்படும் ஹிஸ்புல்லா ஆயுதக் குழுவினர், தங்கள் தகவல் தொடர்புக்காக கையடக்க கருவியாக பேஜர்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்தக் கருவிகள் அனைத்தும் நேற்று முன்தினம் இரவு ஒரேநேரத்தில் திடீரென வெடித்துச் சிதறின. இதில் 9 பேர் பலியாயினர். 3000 பேர் படுகாயம் அடைந்தனர்.

ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு வந்த பேஜர்களை முன்கூட்டியே வழிமறித்து, பார்சல்களை இஸ்ரேலிய உளவு அமைப்பு கைப்பற்றி விட்டது.

பேஜர்களின் உள்ளே வெடிபொருளை வைத்து, மெசேஜ் வந்தால் வெடிக்கும் வகையில் செய்திருக்கிறது. இது எல்லாம் ஐந்து மாதங்களுக்கு முன் நடந்துள்ளது. அந்த பேஜர் பார்சல்கள், ஹிஸ்புல்லாவுக்கு கிடைத்து, அவர்களும் வெடிபொருள் இருப்பது தெரியாமலேயே பயன்படுத்தி வந்துள்ளனர்.

இஸ்ரேலிய உளவு அமைப்பினர் குறித்த நேரத்தில் மெசேஜ் அனுப்பி அவற்றை நேற்று முன்தினம் வெடிக்க வைத்து விட்டனர். இப்படி பேஜர்கள் மூலம் தாக்குதல் நடத்துவது உலகில் இதுவே முதல் முறை என்பதால், ஒட்டு மொத்த உலக நாடுகளும் அதிர்ச்சி அடைந்துள்ளன.

20 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவாக்கப்பட்ட தகவல் தொடர்பு சாதனங்களில் பிரபலமானது பேஜர்கள். இது கம்பில்லா தொலைத் தொடர்பு சாதனங்களாகும். ஒரு வழிப்பாதைத் தகவல் தொடர்புக்கு வசதியானவை. மெசேஜ் பெறுபவர் பதில் அனுப்ப முடியாது. இந்தியாவிலும், 20 ஆம் நூற்றாண்டின் கடைசி பத்தாண்டுகளில் இவை புழக்கத்தில் இருந்தன. காலப்போக்கில் சந்தையில் இருந்து காணாமல் போய்விட்டன.

மொபைல் போன் அதிநவீன வளர்ச்சிகள், மெசேஜ் அனுப்புதல் உள்ளிட்ட அடுத்தடுத்து மாற்றங்கள் வந்ததும் பேஜர்கள் உபயோகம் நின்று விட்டது.

அதிநவீன சாதனங்கள் வந்தாலும் சில முக்கிய பகுதியில் பேஜர்கள் இன்னும் பயன்பாட்டில் உள்ளது. இதற்கு அவற்றின் தனித்துவமான நன்மைகள் தான் காரணம். இதனை உபயோகப்படுத்துவது நம்பகத் தன்மைக்காக கருதப்படுகிறது.

பேஜர்களில் உள்ள பேட்டரிகளுக்கு ஆயுள் காலம் அதிகம். இதனால், சிக்னல்கள் கிடைக்காத பகுதிகளில், மருத்துவமனைகளுக்குள் உபயோகப்படுத்தப்படுகிறது.

ஒரு முறை சார்ஜ் போட்டால், ஒரு வாரம் கூட பயன்படுத்தலாம். பேஜர்கள் மூலம் தொடர்புகொள்வது மிகவும் பாதுகாப்பானதாகவும் தனிப்பட்டதாகவும் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, சுகாதாரப் பராமரிப்பில், மருத்துவச் சாதனங்களில் குறுக்கிடும் அபாயம் காரணமாக செல்போன்களைப் பயன்படுத்த முடியாத சூழலில் விரைவாகத் தொடர்பு கொள்ள வேண்டிய டாக்டர்கள் மற்றும் நர்ஸ்களுக்கு பேஜர்கள் இன்றியமையாததாகவே இருக்கும்.

பொலிஸார் மற்றும் தீயணைப்புத் துறைகள் உள்ளிட்ட அவசரச் சேவைகளும் உடனடி விழிப்பூட்டல்களுக்கு பேஜர்களை நம்பியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ...டுகளில் பரவியுள்ள ...வகை கொரோனா



...திய வகை ...ாற்று தற் ...ளில் பரவி ...வளிநாட்டு ...தி வெளியிட்டுள்ளன.

அதன்படி போலந்து, நோர்வே, லக்சம்பர்க், உக்ரைன், போர்த்துக்கல், சீனா உள்ளிட்ட 27 நாடுகளைச் சேர்ந்த 500 மாதிரிகளில் இருப்பது தெரியவந்துள்ளது.

மேலும் டென்மார்க், ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் லண்டனில் புதிய வகை கொரோனா மாறுபாடு வேகமாகப் பரவிவருவதாக கூறப்படுகிறது. (நி)

## மீண்டும் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை நடத்திய வடகொரியா

(பியாங்யாங்)


உலக நாடுகளின் எதிர்ப்பை மீறி வடகொரியா தொடர்ந்து ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கையை அமெரிக்கா, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா தலைமையில் வடகொரியாவின் மீது புதிய பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. எனினும், அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளைப் பொருட் படுத்தாமல் வடகொரியா அவ்வப்போது ஏவுகணை சோதனைகளை நடத்தி வருகிறது.

இந்நிலையில், வடகொரியா நேற்று மீண்டும் பாலிஸ்டிக் ஏவுகணையை பரிசோதனை செய்தது என ஜப்பான் நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

அணுஆயுதப் போருக்கு தயார் என வடகொரிய ஜனாதிபதி அறிவித்த சில தினங்களுக்குப் பின்னர் தொடர்ந்து ஏவுகணை சோதனையை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடல் நுண்ணுயிர் சூழகத்தினை விருத்தி செய்யும் நம்மூர் உணவு




பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

"உணவே மருந்து, மருந்தே உணவு" என்னும் மெய்ப் பொருளுக்கான அர்த்தம் பல வேளைகளில் எமக்கு புரிவதில்லை. இந்த அவசர உலகத்தில் எது விரைவாக இலகுவாக இன்னும் சுவையாக அகப்படுகின்றதோ அவற்றை வேறெதனையும் கவனத்திற்கொள்ளாது அப்படியே ஓடியபடியே வாயினுள் திணித்தபடி எமது அன்றாட வேலைகளுடன் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கின்றோம்.

ஓய்வு ஒளிவின்றி ஓடிவிட்டு உடலில் நோய் தலைப்பட்டவுடன் சற்று ஆறுதலடைய மனம் ஏங்குகின்றது. இதற்காக வைத்தியரை அணுகி அவரது புத்திமதிகளைக் கேட்டபின் அதனை சாட்டாக வைத்தாவது சற்று ஓய்வடைய தொடங்குகின்றோம். உடலுக்கும் மூளைக்கும் இத்தகைய ஓய்வு அவசியம். அதிலும் தினமும் குறைந்தது 6 மணித்தியாலங்கள் நித்திரை என்பது மிகமிக அவசியம். சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



விவசாய விருத்தியில் நாம் எமது தேவைக்கென பல வகையான உணவுப்பயிர்களைப் பயிரிட்டாலும் அதிகரித்திருக்கும் சனத தொகைக்கு உணவூட்ட திருந்திய கலப்பினப் பயிர்களைப் பயிரிட வேண்டிய கட்டாயத்தில் விவசாயியும் உந்தப்பட்டிருக்கின்றான். ஆனாலும் எம்மூர் பாரம்பரிய பயிரினங்கள் எமது தேக ஆரோக்கியத்துக்கானது என்பதனை எமது முன்னோர்கள் எழுதி வைத்தும் உண்டு வாழ்ந்தும் காட்டியிருக்கின்றார்கள்.

நீண்ட ஆயுளுடன் வாழ்ந்த முன்னோர்களின் ரகசியம் என்பது தினமும் உடற்பயிற்சியுடன் அளவாக சத்தான உணவுகளை தேர்ந்தெடுத்து உண வாக்கினார்கள். சத்தான உணவும் உடல் உரம் பெற உடற் பயிற்சியும் தேவையான ஓய்வும் மிகமிக அவசியமாகும்.

பசுமைப் புரட்சியின் (Green Revolution) போது அதிகரித்த சனத்தொகைக்கு உணவளிப்பதே முதற் கடமையாக இருந்தது. அதனால் உருவாக்கப்பட்ட திருந்திய கலப்பினப் பயிர்களில் பீடை நோய்க்கெதிரான தன்மை நலிவுற்றதனை கணக்கிலெடுக்கத் தவறியதால் பசுமைப் புரட்சியின் பாரிய விளைவுகளில் ஒன்றாக பீடைநோய் பெருக்கமும் அதனால் அதிகளவில் பீடைநாசினிகளின் உருவாக்கம் முனைப்புப் பெற்றது. வழமையான பீடைகள் நோய்களைக் கூடத் தாக்குப் பிடிக்க முடியாமல் எமது புதிய பயிர்வர்க்கங்கள் காணப்பட்டமை இதற்கொரு காரணமாகும்.

பலவகையான பீடை நாசினிகளின் பயன்பாடு சூழலை மாசுபடுத்துவதில் சென்று முடிவடைந்திருக்கின்றது. வளமான எமது சூழலில் அசே தன நஞ்சுகள் கலப்பதற்கு இந்தப் பீடை நாசி னிகள் பிரயோகம் அமைந்து விட்டது. இந்த நிலை தற்போதும் தொடர்ந்து கொண்டே இருக் கின்றது. பீடைப்பெருக்கம் ஒரு பக்கமிருக்க உற்பத்தியான நெல்லில் சோறு சமைக்கும் போது அது ஒரு நாளுக்குள் பழு தடையாமல் இருக்க முடியாது.

பழஞ்சோறு என நம்மவர்கள் சமைத்த சோற்றுக்கு நீரூற்றி மறுநாள் அதனை பிசைந்து உண்டு மிருக்கின்றோம். இவ்வாறு சமைத்த சோறு பழுதடையாமல் இருக்கக்கூடிய தன்மை திருந்திய கலப்பினப்பயிர்களில் முழு வதுமாக அற்றுப் போயிருக்கின்றது.

ஆனால் எமது பாரம்பரிய நெல்லினங்களான மொட்டைக் கறுப்பன் மற்றும் மொறுங்கள் போன்ற வர்க்கங்கள் மேற்கூறியபடி பழஞ்சோறு எடுப்பதற்கு மிகவும் பொருத்தமான வர்க்கங்களாகும். இதில் ஆச்சரியம் என்னவெனில் பழஞ் சோறு என்பது இரவு முழுக்க புளித்து மறுநாள் தயாராகும். பழஞ் சோறு அதி களவில் நன்மை தரும் பக்ரீறியாக் களை குறிப்பாக லக்டோ பசிலசு பக்ரீறியாக்களை அதிகமாக கொண்டிருக்கின்றது. இவை சமிபாட்டுத் தொகுதியிலுள்ள நன்மை தரும் நுண்ணங்கிகளை அதிகளவில் உற்பத்தியாக்கிவிடும். இவ்வாறான குடலுக்கு நன்மைதரும் நுண்ணுயிர் சூழகத்தினைக் (Microbio me) கொண்டி ருப்பது இரைப் யையில் குடலில் ஏற்படும் குடற்புண் மற்றும் ஓவ்வாத் தன்மை என்பனவற்றிற்கு தீர்வாக வுமிருக்கும். இந்த அதிகரித்த நன்மை தரும் நுண்ணங்கிகளை தருகின்ற உணவுகளை Prebiotic என அழைக்கின்றனர்.

இவ்வாறான நுண்ணங்கிகளின் செயற் பாட்டினால் உடலுக்கு தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களும் கிடைப்பதனை Probiotic என அழைக்கின்றனர். உடலுக்கு ஊட்டச்சத்து தரும் உணவு வகைகளை சிபாரிசு செய்யும் போது நம் ஊர் பயிர் வகைகளை அதிகம் பயன்படுத்துவது சிறந்தது. எமது தேசத்தின் சனத்தொகை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அடக்கப்பட்டிருக்கின்றது. அப்படியிருந்தும் எமது. சனத் தொகைக்கு உணவளிக்க உற்பத்தி போதாது.

எமக்குணவை நாமே உற்பத்தி செய்து உண்போம் என்பது எங்கு பார்த்தாலும் எதிரொலித்துக் கொண்டே தான் இருக்கின்றது.

அதிலும் எமது உடலுக்கு நன்மை தருகின்ற நுண்ணங்கிகளைக் கொண்ட உணவு களை உள்ளெடுப்பது தேவையான ஊட்டச்சத்தையும் உடலுக்கு கிடைக்கச் செய்வதாகும்.

நன்மை தரும் நுண் ணங்கிகளால் உருவாகும் உணவில் அனைத்து ஊட் டச்சத்துகளும் கிடைப்பதால் எமது முன்னோர் எமது பாரம்பரிய நெல்லினங்களிலிருந்து சோறு சமைத்து அதனை ஓரிரவு நீரிட்டு நொதிக்க வைத்து மறுநாள் ஆரோக் கியமான உணவாக உண்டிருக்கின்றனர். ஆனால் தற்போது வடபுலத்தில் பயிர் செய்யப்படும் ஆட்டக்காரி நெல் லினம் விவசாயத் திணைக் களத் தின் சிபாரிசினுள் இல்லாதது. ஆனால் பரந்துபட்டு பயிர் செய்யப்பட்டு வருகின்றது.

பல வகை பலகாரங்கள் செய்வதற்கு இந்த நெல்லினையே பலரும் பயன்படுத்துவதும் ஆனால் மேற்கூறியது போல பழைய சோறு செய்வதற்கு உகந்ததல்லாமலும் இருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆட்டக்காரி நெல்லினம் மக்களின் வர வேற்பைப் பெற்றிருப்பதுடன் அதனது பயன்பாடு அதிகரித்திருப்பதும் மேலும் இதனை ஆய்வுக்குட படுத்த வேண்டிய தேவை ஆய்வாளர்களுக்கு உணர வைத்திருக்கின்றது.

எமது சமிபாட்டுத் தொகுதியினை நம்மூர் பயிரினங்கள் சிறப்புறப் பாதுகாத்தமையை நாம் என்றும் மறத்தலாகாது. அவற்றினது பயன்பாட்டை முழுமையாக நாம் பெற்றிட நம்மூர் பயிரினங்களை அழியவிடாது அவற்றை பயிரிட்டு பலன் பெறுவோம்.

---

# இன்று ஒரு தகவல் 226



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## சத்துக் கெடாத சமையல்

எங்கள் வீட்டில் எப்போதும் சாப்பாடு நன்றாக இருக்கும். சார் என்று மார்தட்டிச் சொன்னார் ஒருவர். உங்கள் மனைவி சமையல் செய்வதிலே அவ்வளவு கெட்டிக்காரங் களா? என்று கேட்டேன். இல்லை சார் சமையல் செய்வதிலே நான் அவ்வளவு கெட்டிக்காரன் என்று சொல்லி பெருமைப்பட்டுக் கொண்டார்.சமையல் யார் வேண்டுமென்றாலும் செய்யட்டும் அதைப் பற்றி பரவாயில்லை.சமையல் ருசியாகயிருந்தால் மட்டும் போதாது. சமைக்கிறவர்கள் முக்கியமாக தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு விடயம் என்னவென்றால் சத்துக் கெடாமல் சமைப்பது எப்படி என்று தான். சத்தில்லாத ஆகாரத்தை எவ்வளவு சாப்பிட்டாலும் என்னங்க பிரயோசனம்? சரி காய்கறி உணவிலே இருக் கின்ற சத்து முழுவதுமாக நமக்கு கிடைக்க வேண்டும் என்றால் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

10 முக்கியமான குறிப்புகளைக் கவனத்திலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று நிபுணர்கள் சொல்லுகிறார்கள். முதல் குறிப்பு: தானியங்களையும் பருப்புவகைகளையும் மிகவும் தீட்டக்கூடாது. ஏன் என்றால் தாவர உணவுகளிலே வெளிப் புறப்பகுதியிலே தோல் பகுதியிலே தான் சத்து அதிகமாக இருக்கிறது.இரண்டாவது குறிப்பு: போத்தலிலே அடைத்த உணவு, பதப்படுத்திய உணவு இதையெல்லாம் தவிர்ப்பது நல்லது. ஏன் என்றால் அதையெல்லாம் தயார் செய்து சமைத்தாலே அதிலே உள்ள விற்றமின் C, B 6 இந்த சத்துக்கள் எல்லாம் அழிந்து விடும்.

மூன்றாவது குறிப்பு: காய்கறி, பழங்கள் எல்லாம் வாங்கும் போது நிறத்தை கவனித்து வாங்கவேண்டும். நிறம் அடர்த்தியாக இருந்தால் சத்தும் அதிகமாக இருக்கும். வெளுப்பாக உள்ளதைக்காட்டிலும் கடும் நிறம் உள்ளது நல்லது. உதாரணமாக முட்டைக்கோஸ் வெள்ளையாகப் பார்ப்பதற்கு பளீச் என்று இருக்கும். இன்னொன்று கரும் பச்சையாக இருக்கும்.உதாரணத்திற்கு வெள்ளையாக உள்ளதைத் தான் எடுக்கத் தோன்றும். ஆனால் அதில் சத்தும் குறைவாகத்தான் இருக்கும். கரும் பச்சையாக உள்ளதில் சத்து அதிகமாக இருக்கும். கரட் டிலே மஞ்சளாக உள்ளதை விட சிவப்பாக இருப்பது நல்லது.

நான்காவது குறிப்பு: உணவு, தானியங்கள், பருப்பு வகைகள் இதையெல்லாம் ஈரமில்லாத பாத்திரத்திலே காற்றுப் புகாத அளவுக்கு வைத்திருக்க வேண்டும். அடுத்த படியாக காய்கறி, பழம் இதையெல்லாம் புதிதாக வாங்குவது தான் நல்லது. வாங்கி வீட்டிலேயே அதிக நாள் வைத்திருந்து சாப்பிடவேண்டியதில்லை. குளிர்சாதனப் பெட்டியிலே கூட இரண்டு மூன்று நாளைக்கு மேல் வைத்திருந்தால் விற்றமின் C சத்து பாதிக்குப் பாதி குறையத் தான் செய்யும்.

இன்னொரு முக்கியமான விடயம் முடிந்தளவு காய்கறி, பழம் இதனுடைய தோலை ஒதுக்கி எறிந்து விடாதீர்கள். அதிலே தான் சத்து அதிகம். தோலை உரித்து எறிவதை விட அதை சுரண்டி சுத்தப்படுத்துவது நல்லது. சிலவற் றிலே தோலை அப்புறப்படுத்தியே ஆக வேண்டும் என்றால் முதலிலே அப்படியே வேகவைத்து விட்டு அதன் பின்பு அதை எடுத்து விடலாம். முடிந்த அளவுக்கு எது எதை பச்சையாகச் சாப்பிட முடியுமோ அது அதை பச்சையாகச் சாப்பிடுங்கள். ஆடு, மாடு எல்லாம் சாப்பிடவில் லையா அதுமாதிரி.

ஏன் என்றால் தண்ணீரிலே வேக வைக்கும் போது தண்ணீரிலே கரையக்கூடிய விற்றமின் B குரூப் C இவையெல்லாம் வீணாகி விடும். சாப்பிடக் கூடிய காம்பு, தண்டு, இலை இதையெல்லாம் வீணாக்காதீர்கள் உதாரணத்திற்கு காலிஃ பிளவர், முட்டைக்கோஸ் இதிலேயெல்லாம் நாம் எதை ஒதுக்கி எறிகின்றோமோ அவற்றிலே எல்லாம் நமக்குத் தேவையான நார்ப்பொருள் இருக்கிறது.

அடுத்தபடியாகச் சமையல் என்று வரும் போது ஆவியிலே வேகவைப்பது, பிரஸர் குக்கரிலே வேகவைப்பது இவையெல்லாம் நல்லது தான். வேகவைக்கும் போது குறைவாகத் தண்ணீர் வைக்க வேண்டும் தண்ணீர் கொதித்த பின்பு காய் கறியைப் போடவேண்டும். பாத்திரத்தை மூடி வைக்க வேண்டும். இதனால் தண்ணீரிலே கரையும் விற்றமின் இழப்பை முடிந்தளவிற்கு குறைக்கலாம். இவ்வளவு தான் சேர். சத்துக்கெடாமல் சமைப்பதற்கான முறைகளைக் கேட்டு விட்டு அவர் சொன்னார் சார். எங்கள் வீட்டில் நான் தான் சமைக்கின்றேன். அதை சொல்வதற்கு எனக்கு வெட்கமில்லை. நீங்கள் இப்போது சொன்ன இவ்வளவு விடயங்களையும் கவனத்தில் வைத்துக் கொண்டு தான் சார் எங்கள் வீட்டில் நான் சமைக்கின்றேன் என்றார். சத்துக்கெடாமல் சமைப்பதையா சொல்லுகின்றீர்கள். ஆனால் உங்களைப் பார்த்தால் சத்துள்ள ஆசாமியாகத் தெரியவில்லையே என்றேன். அவர் பரிதாபமாக என்னை நிமிர்ந்து பார்த்து சமைப்பது தான் சார் நான் சாப்பிடுவது நான் இல்லை என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏற்றுமதி வலய நடவடிக்கையூடாக தொழில் இன்மை பிரச்சினைக்கு தீர்வு

## வடமாகாண ஆளுநர்





(யாழ்ப்பாணம்)

ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் ஊடாக வடக்கு மாகாணத்தில் காணப்படும் தொழில் இன்மை பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் எனவும், பொருளாதார மேம்பாட்டிற்கு உந்து சக்தியாக இது அமையும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்

வடக்கு மாகாணத்திலுள்ள ஆளணி வெற்றிடங்களை பட்டதாரிகள் , டிப்ளோமாதாரிகளை கொண்டு நிரப்புவதற்கான அனுமதி கிடைத்துள்ள போதிலும், சில காரணங்களுக்கு அமைய ஆட்சேர்ப்பு நடவடிக்கை தாமதமாகியுள்ளதாகவும் ஆளுநர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ள மூன்று ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் இரண்டு வலயங்களின் நடவடிக்கைகள் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை மற்றும் கிளிநொச்சி பரந்தன் ஆகிய ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் நடவடிக்கைகள் அண்மையில் உத்தியோக பூர்வமாக பெயரிடப்பட்டு அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது .இந்நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார். (6)



யாழ். இந்து சாரணர்களால் ஒழுங்கமைக்கப்பட்ட குருதிக் கொடை முகாம் நேற்று பாடசாலையில் இடம்பெற்றது. இதன்போது பாடசாலை மாணவர்கள், முன்னாள் யாழ். இந்து சாரணர்கள், பழைய மாணவர்கள் என 42 பேர் குருதிக் கொடை வழங்கியிருந்தனர்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 220 | 200 | 200-250 | 250 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 160 | 180 | 120 | 400 |
| தக்காளி | 160. | 200 | 250 | 200 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 280 | 240 | 150 | 200 |
| கோவா | 200 | 300 | 300 | 280 | 300 |
| கரட் | 200 | 300 | 300 | 270 | 300 |
| பூசணி | 60 | 60 | 100 | 50 | 80 |
| புடோல் | 60 | 130 | 80 | 100 | 200 |
| வாழைக்காய் | 150 | 230 | 240 | 160-200 | 240 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 150-300 | 320 |
| பெரிய வெங்காயம் | 280 | 180 | 250 | 260 | 250 |
| பாகற்காய் | 350 | 300 | 300 | 350 | 300 |
| வெண்டக்காய் | 60 | 80 | 100 | 80-100 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 180 | 240 | 150 | 200 |
| பயற்றங்காய் | 250 | 300 | 100 | 250-300 | 300 |
| லீக்ஸ் | 320 | 320 | 320 | 320 | 350 |
| பீற்றூட் | 100 | 100 | 100 | 50-80 | 140 |
| கறிமிளகாய் | 400 | 450 | 450 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 200 | 250-350 | 400 |
| போஞ்சி | 250 | 380 | 350 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | -- | -- | 200 |
| கீரை - 1 பிடி | 120 | 60 | 100 | 80-100 | 100 |
| தேசிக்காய் | 500 | 300 | 300 | 300-350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 120 | 80-110 | 140 |
| இராசவள்ளி | -- | 850 | -- | 600 | 800 |
| வெங்காயப்பூ | 400 | 350 | 400 | -- | 360 |
| முள்ளங்கி | 150 | 120 | 150 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 80 | 120 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3224

Search for people, places and things

### சுஜீபா




### திலக்ஷன்





### கிருசிகா




### சாலினி




### சத்தியா




### தனுசியா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 584





சிலர் புறக் கண்களை மூடிக் கொண்டு தியானத்தில் அமர்ந்து சொல்வார்கள் இன்னும் சிலர் தீபப்பிழம்பை உற்று நோக்கிய வண்ணம் மனத்தை ஒருமுகப்படுத்திக் கொண்டு, நடந்துபோன, நடக்கப்போகிற நிகழ்ச்சிகளை அந்தத் தீபப்பிழம்பில் பார்த்துச் சொல்வார்கள்.

இன்னும் சிலருக்கு எதிர்ப் பட்டவர்களின் முகத்தைப் பார்க்கும் போதே அவர்களுடைய சென்றகால வரலாறும், வருங்கால வரலாறும் மனத்தில் தோன்றிவிடும் இத்தகைய அதிசயசக்திகள் படைத்தவர்களைத் தவிர காக்கை இடம் போயிற்றா வலம் போயிற்றா, என்பது முதலான வெளி நிகழ்ச்சிகளைக் கொண்டு சகுன பலன்களை உரைக்கும் சாதாரண நிமித்தக்காரர்களும் உண்டு.

வந்தியத்தேவன் தன்னை "நிமித்தக்காரா!" என்று மதுராந்தகர் அழைத்ததும் திடுக்கிட்டான். இளவரசர் மேலும் தன்னை என்னென்ன கேள்விகள் கேட்பாரோ தெரியவில்லை. அவற்றுக்கெல்லாம் சாமர்த்தியமாகத் தக்க விடை கூறிச் சமாளித்துக் கொள்ளவேண்டும். கடவுளே! இங்கிருந்து, இவரிடமிருந்து தப்பித்துச் செல்வது எப்படி? இளவரசியைத் தனியாகச் சந்தித்துப் பேசுவது எப்படி?

"வேறு யோசனை ஒன்றுமில்லை, ஐயா! நான் நிமித்தக்காரானாயிருப்பதைக் காட்டிலும் இப்போது சபையில் பார்த்த பிள்ளையைப்போல் நாலு பதிகங்களைக் கற்றிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! எனக்கும் எவ்வளவு உபசார மரியாதையெல்லாம் நடக்கும் என்றுதான் சிந்தித்துக் கொண்டிருந்தேன்!" என்றான்.

"யார் வேண்டாம் என்றார்கள்! நீயும் தேவாரத் திருப்பதிகம் கற்றுக் கொண்டு பாடுவது தானே!"

"இன்னாருக்கு இன்னபடி என்று எழுதியிருப்பது போலத் தானே நடக்கும் இளவரசே! வீண் ஆசைப்பட்டு என்ன பயன்?"

"பதிகம் பாடிய அந்தப் பிள்ளையைப்பற்றி உனக்கு என்ன தோன்றுகிறது? அவனுடைய யோகம்"

"மிக உயர்ந்த யோகம். சிவ யோகமும், இராஜயோகமும் கலந்தது. மன்னர்களும், மகாராணிகளும் அந்தப் பிள்ளைக்கு மரியாதை செய்வார்கள். மகான்களுடைய பெயருடனே அவருடைய பெயரும் சேர்ந்து இப் பூவுலகத்தில் நெடுங்காலம் விளங்கும்".

வல்லவரையன் ஏதோ குருட்டாம் போக்காக இவ்விதம் கூறினான். ஆனால் மதுராந்தகருடைய மனத்தில் அவனுடைய வார்த்தைகள் பெருங் கிளர்ச்சியை உண்டாக்கி விட்டன.

"என்னுடைய யோகம் எப்படி என்று சொல், பார்க்கலாம்!"

"அவனுடைய யோகத்தைப் போலவே தங்கள் யோகமும் சிவயோகமும் இராஜயோகமும் கலந்தது. ஆனால் இன்னும் மேன்மையானது!"

"அப்பனே! கொஞ்சம் விவரமாகச் சொல், பார்க்கலாம்."

வல்லவரையன் என்ன சொல்வது என்று யோசிக்க அவகாசம் வேண்டினான். ஆகையால், "இப்படியெல்லாம் அவசரப்பட்டால் முடியுமா? விவரமாகச் சொல்ல வேண்டுமானால், தீபம் ஏற்றி, வைத்து அகிற்புகை போடச் சொல்லவேணும், தாங்களும் தீபத்துக்குப் பின்னால் உட்கார்ந்து கொள்ளவேணும் அப்போது வருங்கால நிகழ்ச்சிகளை நடக்கப் போகிறபடியே பார்த்துச் சொல்வேன்."

மதுராந்தகர் பரபரப்பு அடைந்து தீபம் ஏற்றி வைக்கும்படியும் அகிற்புகை போடும்படியும் கட்டளையிட்டார். தீபத்துக்கு முன்னாலும் பின்னாலும் இரண்டு மணைகளும் போடப்பட்டன.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## அலுத்துக்கொண்ட வெட்டுக்கிளிகள்

ஒரு பெரிய கோதுமை தோட்டம் ஒன்று இருந்தது. அங்கு விவசாயி ஒருவன் ஒவ்வொரு வருடமும் கோதுமை சாகுபடி செய்து கொண்டிருந்தான். சாகுபடி செய்யும் இடங்களில் பொதுவாகவே பூச்சிகள், குருவிகள் நிறையவே நீங்கள் பார்க்கலாம். அந்தத் தோட்டத்தில் கோதுமை அறுவடை நாட்கள் நெருங்க ஆரம்பித்தன.

அறுவடை தொடங்கிய நாளில் இருந்து எறும்புகள் தங்கள் கூட்டத்துடன் வந்து கோதுமைகளை எடுத்து சென்றன. தோட்டத்தில் ஒரு வெட்டுக்கிளி படுத்துக் கொண்டு பாட்டு பாடி கொண்டே இருந்தது. அதுமட்டுமில்லாமல் அங்கு கூட்டமாகச்சென்று கொண்டிருந்த எறும்புகளை கேலி செய்தது.

அந்தக் கூட்டத்தை பார்த்து கேலி செய்து பாட்டு பாடியது வெட்டுக்கிளி. ஆனால் அதை காதில் வாங்கி கொள்ளாமல் கோதுமையை தூக்கி கொண்டு நடந்து சென்றன. ஆனாலும் விடாமல் தினமும் எறும்புக் கூட்டத்தை வம்பி ழுத்து கொண்டே இருந் தது வெட்டுக்கிளி.

இப்படி தினமும் எடுத்துக்கொண்டு போய் என்ன செய்ய போறீங்க லூசுகளா என வெட்டுக் கிளி கேட்க, அதற்கு பதில் எதுவும் சொல்லாமல் வரிசையாக சென்றன. அறுவடை நாளும் முடிந்தது. வெட்டுக்கிளி அன்றாடம் தோட்டத்தில் இருந்து கோதுமையை சாப்பிட்ட நிலையில் தோட்டம் எதுவும் இல்லாமல் வெறிச் சோடியது.

வெயில் காலம் என்பதால் வெட்டுக்கிளி வெயிலில் அலைந்து திரிந்து தனக்கான உணவைத் தேடி கண்டு பிடித்து நாட்களை ஓட்டியது. எறும்புகளும் தங்கள் கூட்டத்துடன் தினமும் உணவுகளை சுமந்து செல்வதை விடாமல் செய்து வந்தன. ஒரு வழியாக வெயில்காலம் முடிந்து மழைக்காலம் தொடங்க ஆரம்பித்தது. எறும்புகளால் வெளி யில் இறங்கி உணவை தேடி செல்ல முடியாத தால் சேர்த்து வைத்த உணவை எடுத்து உண்டன.

அதே சமயம் வெட்டுக் கிளியால் உணவை தேடி செல்ல முடிய வில்லை. சேமிக்க வேண்டிய நேரத்தில் எறும்புகளை கேலி செய்து பாட்டு பாடி வம்பிழுத்த வெட்டுக் கிளியால் இரையை தேடி மழையில் செல்ல முடியாமல் அவதிப்பட்டது. தங்கள் கூட்டத்தையே கேலி செய்திருந்தாலும் எறும்புகள் வெட்டுக்கிளி படும் கஷ்டத்தை பார்த்து பரிதாபம் கொண் டன. தாங்கள் சேமித்து வைத்த உணவில் இருந்து வெட்டுக்கிளிக்கு உணவை பகிர்ந்து கொண்டன. மழைக் காலம் முடியும் வரை வெட்டுக்கிளியையும் தங்களில் ஒருவராக பார்த்து கொண்டன. எறும்புகளை கேலி செய்யும் வெட்டுக் கிளிக்கு உதவியதை எண்ணிய வெட்டுக்கிளி தனது தவறை உணர்ந்தது. நீங்கள் சிறுக சிறுக செய்தாலும் பின்னாளில் உங்களுக்கு அது உதவியுள்ளது. உங்களை கேலி செய்தற்காக என்னை மன் னித்து விடுங்கள் என்று கெஞ்சியது. எறும்புகளும் வெட்டுக் கிளியை மன்னித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை எண்ணியே வருந்தி தளர்ந்து விடாமல் நல்லவைகளை செய்ய எழுந்து நடைபோடுவதே சிறப்பம்சமாகும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தரம் 5 மாணவர்களுக்கு அநீதி இழைத்துவிடாதீர்கள்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த 15ஆம் திகதி நடைபெற்று முடிந்தது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை என்பது நெருப்பாற்றை நீந்திக் கடப்பதற்கு ஒப்பானது.

உண்மை. புலமைப்பரிசில் பரீட்சை என்ற பெயரால், பச்சிளம் பாலகர்கள் வதைக்கப்படுகின்றனர்.

ஓய்வு இல்லை, உறக்கம் இல்லை, விடிந்தால் பாடசாலை, ரியூசன் பின்னர் நித்திரை விழித்துப் படித்தல் என்ற நெருக்கீடுகளினால் தரம் 5 மாணவர்கள் உளத் தாக்கத்துக்கு ஆளாகின்றனர் என்பதை உளமருத்துவர்கள் பல தடவைகள் எச்சரித்து விட்டார்கள்.

இருந்தும் படி... படி... எனப் பெற்றோர்கள் அந்த பிஞ்சுகளுக்குக் கொடுக்கின்ற அழுத்தம் உளநெருக்கீடாக மாறிவிடுகிறது.

ஏதோ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாவிட்டால், எதிர்காலத்தில் அந்தப் பிள்ளை படிக்காதென்பது போலவும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதென்பது போலவும் பெற்றோர்கள் நினைக்கின்றனர்.

தவிர, புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வரும்வரை அந்தப் பிள்ளைகள் ஏக்கத்துடனேயே காலம் கடத்துகின்றனர்.

உண்மை. புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு வெளியாகுவதென்பது ஜனாதிபதித் தேர்தல் முடிவு வெளியாகுவதுபோல நிலைமை இருக்கும்.

இதில் கணிசமான புள்ளியைப் பெற்று சித்தியடைகின்ற மாணவர்களைத் தவிர, ஏனைய மாணவர்களுக்குப் பெற்றோர்கள் செய்கின்ற சங்காபிசேகம் சொல்லிமாளா.

ஏன்தான் இந்த நாட்டில் பிறந்தோம் என்று அந்தப் பிஞ்சுகள் நினைக்குமளவுக்கு பெற்றோர்களின் ஏச்சும் பேச்சும் நச்சரிப்பாகிப் பிள்ளைகளின் பூப்போன்ற மனங்களைச் சிதைத்து விடுகின்றன.

சரி, ஏதோ புலமைப்பரிசில் பரீட்சை முடிவுற்றது நிம்மதி என்றிருந்தால், குறித்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் பரீட்சைக்கு முன்னதாக வெளியாகிவிட்டதான செய்திகள் நெஞ்சை அடைக்கிறது.

ஆம், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பகுதி ஒன்று வினாத்தாள் வெளியாகியதன் காரணமாக மூன்று கேள்விகள் நீக்கப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

பொதுவில் தெளிவற்ற கேள்விகள் அல்லது குறிப்பிட்ட மாணவர்களுக்கு குறித்த வினாக்கள் ஏலவே தெரிந்துவிட்டன என்ற நிலைமைகளில், குறித்த கேள்விகளுக்குத் திறந்த மதிப்பெண்கள் வழங்குகின்ற நடைமுறை உண்டு.

அவ்வாறு திறந்த மதிப்பெண் வழங்கும்போது, அது மாணவர்களுக்கு எந்த வகையிலும் பாதிப்பை ஏற்படுத்தாது.

மாறாக, குறித்த வினாக்களை நீக்கம் செய்வதெனத் தீர்மானிக்கப்படுமாயின், அது தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியாகும்.

எனவே எந்தவகையிலும் மாணவர்கள் பாதிக்கப்படாமல் தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்பதுடன் பரீட்சை வினாத்தாள்கள் வெளியில் கசிவதையும் முற்று முழுதாகத் தடுக்க வேண்டும். அப்போதுதான் திறமையும் அறிவாற்றலும் முன்னிற்கும்.

# இந்தியாவின் முதலீட்டில் காங்கேசனில் சீமெந்து ஆலை

## ஆளுநர் அலுவலகத்தில் ஆரம்பக்கட்ட கலந்துரையாடல்

காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலையை நிறுவுவது தொடர்பான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் நேற்று (18.09.2024) நடைபெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில், ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், முதலீட்டு ஊக்குவிப்பு சபையின் யாழ். பிராந்திய சிரேஷ்ட பிரதிப்பணிப்பாளர் எ.ஆர். ஜெயமனோன் மற்றும் ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தாது, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களைக்கொண்டு சீமெந்து தயாரித்துப் பொதி செய்து உள்நாட்டு தேவைக்காக விற்பனை செய்யும் நோக்குடன் இந்த செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக, காங்கேசன்துறையில் சீமெந்து தொழிற்சாலைக்கான முதலீட்டை மேற்கொள்ளவுள்ள ஆய்வு நிறுவனத்தின் பிரதிநிதிகள் ஆளுநரிடம் தெரிவித்தனர்.

இந்திய முதலீட்டில மேற்கொள்ளவுள்ள சீமெந்துத் தொழிற்சாலையில் அதிநவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படும் எனவும், இதனூடாக உள்ளூர் மக்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டனர்.

நிதி மூலம், தொழிற்சாலையை நிறுவுவதற்கான காணி மூலப்பொருட்களின் இறக்குமதி, விற்பனை செயற்பாடுகள் உள்ளிட்ட செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதற்கான கால எல்லை, சுற்றாடல் அறிக்கை உள்ளிட்ட அனைத்து விடயங்களும் அடங்கிய முழுமையான முன்மொழிவு விரைவாக சமர்பிக்கப்படுமென அவர்கள் இதன் போது தெரிவித்தனர்.

உரிய நடைமுறைகளைப் பின்பற்றி அதனைச்சாதகமான முறையில் பரிசீலிக்கத் தயாராக உள்ளதாக ஆளுநர் கூறினார். (ந-7)

## வாக்களிப்பதற்காக விஷேட பஸ் சேவை

*(கொழும்பு)*

ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்களிக்கச் செல்லும் பயணிகளுக்காக விஷேட பஸ் சேவை முன்னெடுக்கப்படவுள்ளது.

வாக்களிப்பதற்காக கிராமங்களுக்குச் செல்லும் மக்களின் வசதிக்காக நீண்ட தூரப் பயணச் சேவைகளுக்காக மேலதிக பேருந்துகள் பயன்படுத்தப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச்சபை தெரிவித்துள்ளது.

இதேவேளை அன்றைய தினம் மேலதிக தனியார் பஸ் சேவைகள் இடம்பெறாது என தனியார் பேருந்து சங்கங்கள் தெரிவிக்கின்றன.

தனியார் பேருந்து ஊழியர்களும் வாக்களிக்க செல்வதே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குறுகிய தூர சேவைகளைத் தாங்கள் நடத்துவதாக சங்கங்கள் அறிவித்துள்ளன. (ந-7)

## கட்டிலால் விழுந்த குடும்பஸ்தர் மரணம்

*(யாழ்ப்பாணம்)*

கட்டிலில் இருந்து விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் காத்தான்குடி, மட்டக்களப்பைச் சேர்ந்த மீரான் சாது முகமது பவுன் (வயதில் -44) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கடமை புரிந்து வரும் அவர் நேற்று முன்தினம் கட்டிலில் இருந்து விழுந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்ற போது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை யாழ்ப்பாணம் பொலிஸார் நெறிப்படுத்தினர். (ந-7,60)

## சங்கடஹர சதுர்த்தி உத்ஸவம்

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப்பிள்ளையார் தேவஸ்தானத்தில் சங்கடஹர சதுர்த்தி உத்ஸவமானது எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

மாலை 3.45 மணிக்கு மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபப்பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதிவலம் வருவார் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் அறியத்தருகிறார். (ந-7)

## விபரீத முடிவெடுத்த இளைஞன் மரணம்

*(கொடிகாமம்)*

கொடிகாமம் கொயிலாமனைப் பகுதியில் விபரீத முடிவெடுத்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை குறித்த நபர் தனது வீட்டிலிருந்து தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த கோபிசன் (வயது-28) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதோடு மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,30)

## தீக்காயத்திற்குள்ளான மூதாட்டி மரணம்

*(யாழ்ப்பாணம்)*

குப்பி விளக்குத்தட்டுப் பட்டதால் ஏற்பட்ட தீ விபத்தில் படுகாயங்களுக்கு உள்ளான வயோதிபப்பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கிளாலி, எழுதுமட்டுவாளைச் சேர்ந்த நீக்கிலாப்பிள்ளை வலிணமாரி (வயது - 88) என்பவராவார்.

கடந்த 16ம் திகதி தீ விபத்துக்காளான பிரஸ்தாபப் பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் (17) உயிரிழந்தார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை பளைப்பொலிஸார் நெறிப்படுத்தினர். (ந-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும்

## ஒரு பார்வை

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

15

கனடாவின் அரசியலமைப்பு சட்டம் அதன் மத்திய மாகாண அரசுகளின் அதிகாரங் களையும் கடமைகளையும் வரையறை செய்து, சட்ட உருவாக்க வழிமுறைகளையும் விவரிக் கின்றது. மாகாண அரசுகள் உள்ளூர் அரசு களின் அதிகாரங்களையும் கடமைகளையும் வரையறை செய்கின்றன. அரசுகள் தகுந்த வழி முறைகளுக்கமைய சட்டங்களை உருவாக்கி அமுல்படுத்துகின்றன.

(குறிப்பு- மாக்னா கார்ட்டா அல்லது மேக்னா கார்ட்டா என்பது இங்கிலாந்து இராச்சியதின் அரசருக்கும் அந்நாட்டுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட ஓர் உடன்படிக்கையாகும். 1215 ஆம் ஆண்டு முதலில் அரசு முத்திரைத்தாளில் பதிப்பிக்கப்பட்ட இந்த மகாசாசனம் பதின்மூன் றாவது நூற்றாண்டில் சில தற்காலிக விதிகளை நீக்கி அரசரின் ஆட்சிக்கு நேரடியான எதிர்ப்பு களைத் தவிர்த்து மீளவும் பதிப்பிக்கப்பட்டது. இந்த சாசனம் 1225ஆம் ஆண்டு சட்டமாக அங்கீகரிக் கப்பட்டது.)

கனடாவின் அரசியலமைப்பின் அங்கங்களை அரசியலமைப்புச் சட்டம் 1982, உபபிரிவு 52(2) விவரிக்கிறது. இதன்படி கனடாச் சட்டம், 1982 அட்டவணையிலுள்ள அனைத்துச் சட்டங்களும் குறிப்பாணைகளும் அரசியலமைப்புச் சட்டம் 1867இல் (முன்னாளைய பிரித்தானிய வட அமெரிக்கச் சட்டம், 1867) உள்ளதும், இவற் றிற்கான ஏதேனும் திருத்தங்களும் அடங்கும். கனடாவின் உச்சநீதி மன்றம் இந்தப் பட்டியல் முழுமையானதல்ல என்றும் கூட்டமைப்பு உருவானதிற்கு முன்பிருந்த சட்டங்களும் எழுதப்படாத அங்கங்களையும் உள்ளடக்கியது என்றும் கூறியுள்ளது.

கனடாவின் நீதிமன்றத்தின் அமைப்பு சட்டங் களை புரிந்து அமுலாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அரசியல் அமைப்பு சட்டத்தை மீறும் சட்டங்களை செல்லுபடியாகாமல் செய்யும் அதிகாரம் நீதியமைப்புக்கு உண்டு. கனடாவின் உச்ச நீதி மன்றமே சட்ட கட்டமைப்பின் அதி உயர் அதிகாரம் கொண்டது.

### கனேடிய மாகாணங்களும் ஆட்புலங்களும்

கனேடிய மாகாணங்கள் கனடாவின் புவியி யல் பகுதியில் கனடாவின் அரசியலமைப்பின் கீழமை துணைநிலை தேசிய அரசுகளாகும். 1867ஆம் ஆண்டில் கனேடியக் கூட்டமைப்பில் பிரித்தானிய வட அமெரிக்காவின் மூன்று மாகாணங்களான (1) நியூ பிரன்சுவிக், (2) நோவா ஸ்கோசியா மற்றும் (3)கனடா மாகாணம் இருந்தன.

கனடா மாகாணம் கூட்டமைப்பு உருவான போது ஒன்றாரியோ, கியூபெக் எனப் பிரிக்கப் பட்டன. வரலாற்றில் கனடாவின் பன்னாட்டு எல்லைகள் பல மாறுதல்களுக்கு உட்பட்டன. நான்கு மாகாணங்களுடன் துவங்கிய நாடு இன்று பத்து மாகாணங்களையும் மூன்று ஆட்புலங்களையும் உட்கொண்டுள்ளது அவை கீழே தரப்படுகின்றன. அடைப்புக்குள் அவை கூட்டாச்சிக்குள் நுழைந்த ஆண்டு தரப்பட்டுள் ளது.

இந்த பத்து மாகாணங்களாவன: (1) நியூ பிரன்சுவிக் (1867), (2) நோவா ஸ்கோசியா (1867), (3) ஒன்றாரியோ (1867), (4) கியூபெக் (1867), (5)மானிட்டோபா (1870), (6) பிரிட்டிஷ் கொலம்பியா (1871), (7) இளவரசர் எட்வர்ட் தீவு (1873), (8) ஆல்பர்ட்டா (1905), (9) சஸ்காச்சுவான் (1905), (10) நியூஃபவுன்லாந்து மற்றும் லாப்ர டோர் (1949) ஆகும். வடமேற்கு நிலப்பகுதிகள் (1870), நுனவுட் (1999), யூக்கான் (1898) மூன்று ஆட்புலங்களாகும்.

ஒட்டாவா கனடாவின் தலைநகரம் ஆகும். ஆங்கிலம், பிரெஞ்சு ஆகிய இரண்டும் கனடாவின் ஆட்சி மொழிகளாக இருக்கின்றன. 1999ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட நுனாவுட் ஆட்சி நிலப் பகுதியில் இனுக்டிடுட் மொழியும் ஆட்சி மொழி யாகும்.

கனடாவைப் பொறுத்த வரையில் நிர்வாகப் பரவலாக்கத்தின் இன்றைய வடிவமே மூன்று நிலை அரசுகள்: நகர அல்லது மாநகர சபை - மாநில அரசு - மத்திய அரசு. கனடாவில் உள்ள பதினான்கு அரசாங்கங்கள் (மத்திய அரசு உட்பட்டு), பல பாராளுமன்றங்கள், சட்ட வரை முறைகள், பொதுச் சேவைகள் என்பனவற்றில் தத்தம் எல்லைகளுக்குள் நின்று செயற்படு கின்றன. இருப்பினும் சில அதிகாரங்களை நிர்வகிப்பதில் மத்திய மாநில அரசுகள் பங்காளி களாகச் செயற்படுகின்றன.

நாட்டின் வளங்கள் அனைவருக்கும் பொதுவா னவை. அவற்றின் பலன்களை ஒவ்வொரு மக்களும் பாகுபாடின்றி அனுபவிக்க வேண்டும் என்பதற்காக இந்த மூன்று நிலை அரசுகளும் பல உடன்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. அதிகாரங்கள் வரையறைப்படுத்தப்பட்டன, பகிரப்பட்டன, எழுத்தில் வார்க்கப்பட்டன. இந்த எழுத்துக் கோவைக்கு அரசியல் சாசனம் (Constitution) எனப் பெயரும் இடப்பட்டது.

### கனடாவின் சமஷ்டி அரசாங்கம்

1867 இல் கனடா மத்தியப்படுத்தப்பட்ட சமஷ்டியாக உருவாக்கப்பட்டது. அவ்வேளை கனடாவின் ஒட்டாவா அரசாங்கம் பலமுடைய தாகவும், மாநிலங்களின் மீது ஆதிக்கம் கொண் டதாகவும் இருந்தது. ஆரம்பம் இவ்வாறு அமைந்த போதும் கனடா இன்று பெருமளவில் பரவ லாக்கப்பட்ட அதிகாரங்களை உடையதாக மாறி யுள்ளது. இவ்வாறு பரவலாக்கம் நிகழ்ந்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன.

அ) நீதிமன்றங்களின் அதிகாரங்களின் பகிர்வு பற்றிய வியாக்கியானங்களை வழங்கும் தீர்ப்புகள் மாகாண அரசுகளுக்குச் சாதகமாக அமைந்தன.

ஆ) கனடாவின் மத்திய அரசு நிறுவனங்கள் மாகாணங்களின் நலன்களைப் பிரதிநிதித்துவம் செய்யக்கூடியனவாய் இருக்கவில்லை. அது கனடாவின் பன்மைத்துவத்திற்கு ஈடு கொடுக் கக்கூடிய நிலையில் இருக்கவில்லை. இந்நிலை யில் மாகாண அரசுகள் தமது அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்கு மக்களின் ஆதரவு கிடைத்தது.

இ) சுகாதாரம், சமூகநலன் சேவைகள், கல்வி என்பன மாகாணங்களுக்குரிய விடயங்களாகும். இவை 19 ஆம் நூற்றாண்டில் அதிக முக்கியத் துவம் பெற்றிருக்கவில்லை. 20 ஆம் நூற்றாண் டில் இவை முக்கியம் பெற்றதால் மாகாணங்களின் அதிகார எல்லையும் விரிவடைந்தது.

ஈ) இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் கியூபெக்கில் தேசியவாதம் தீவிர வளர்ச்சி பெற்றது. கியூபெக் அரசாங்கத்திற்கு அதிகாரங்கள் பகிர்ந் தளிக்கப்பட்டிருப்பதனால் ஏனைய மாகாணங் களும் நன்மை பெற்றன.

மேற்குறித்த காரணங்களால் கனடாவின் ஒட்டாவா அரசாங்கமும் மாகாண அரசாங் கங்களும் அதிகாரப்பலம் மிக்கனவாக விளங் குகின்றன.

அவை இன்று சமூக அபிவிருத்தி, பொரு ளாதார அபிவிருத்தி என்பனவற்றில் முக்கிய பங்காற்றுகின்றன. அரசாங்கங்களுக்கு இடை யிலான ஒருங்கிணைவிலும் முன்னேற்றம் காணப்படுகிறது. இடையிடையே அரசாங்கங்க ளுக்கிடையிலான முறுகல் நிலை எழுந்த போதும், பொதுவாக ஒருங்கிணைப்பும் கூட்டுற வும் முன்னேற்றப் பாதையில் செல்கிறது.

1867 அரசியல் யாப்புச் சட்டத்தின் பிரிவு 91-95 இன் படி சமஷ்டி அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களிற்கும் உரிய அதிகாரங்கள் வகுத்து ஒதுக்கப்பட்டுள்ளன. இச் சட்டத்தின்படி கனடாவின் பாராளுமன்றம் அகல் விரிவான அதிகாரங்களை உடையதாக உள்ளது. கனேடிய பாராளுமன்றத்திற்கென குறிப்பாக ஒதுக்கப்படாத எந்தவோர் அதிகாரமும் கனடாவின் (சமஷ்டி) பாராளுமன்றத்திற்குரிய எஞ்சிய அதிகாரங்கள் (RESIDUAL POWERS) ஆகும். அவை கனே டிய பாராளுமன்றத்திற்கு உரித்தானவை.

மாகாணங்களுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்கள் குறிப்பானவையாகவும் வரையறுக்கப்பட்ட வையாகவும் (SPECIFIC AND LIMITED) இருந்தன. ஆயினும் நீதிமன்ற விளக்கம் (JUDICIAL INTERPRETATION) பிரிவு 92 (13) இன் படியான சொத்துக்களும் சிவில் உரிமை களும் பற்றிய மாகாணங்களின் அதிகாரங்களை ஒரு வகை எஞ்சிய அதிகாரங்களாக மாற்றி யுள்ளன.

### P.O.G.G அதிகாரங்கள்

சமஷ்டி பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரங்கள் அரசியல் யாப்புச் சட்டம் 1867 இன் பிரிவு 91 இல் கூறப்பட்டுள்ளன. இப் பிரிவு கனேடிய பாராளுமன்றம் 'சமாதானம், ஒழுங்கு கனடா வின் நல்லாட்சி' என்னும் நோக்கங்களோடு சட்டங்களை மாகாணச் சட்ட சபைகளுக்குக் குறித்தொதுக்கப்படாத விடயங்களில் ஆக்கலாம் எனக் குறிப்பிடுகிறது. இது கனடாவின் சமஷ்டி பாராளுமன்றத்திற்கு கொடுக்கப்பட்ட பொதுவான அதிகாரமாகும். அரசியல் யாப்பினை வரைந்த வர்கள் இப் பொது அதிகாரத்தின் கீழ் அமைவன வான 29 அதிகாரங்களின் தலைப்புகளை அறிவித்தார்கள். இவ் அதிகாரம் 'P.O.G.G' அதிகாரம் எனக் குறிப்பிடப்படும். அதாவது சமாதானம், ஒழுங்கு, கனடாவின் நல்லாட்சி (PEACE, ORDER AND GOOD GOVERNANCE OF CANADA – சுருக்கம் P.O.G.G) என்னும் பொது அதிகாரம் என்ற பொருள் உடையதாகும்.

**29 தலைப்புக்களில் குறிப்பிடப்பட்டவற்றுள் முக்கியமானவை சில வருமாறு:**

- வியாபாரத்தையும் வர்த்தகத்தையும் ஒழுங்குபடுத்துதல் - பிரிவு 91(2) இது தற்போது முழு நாட்டினையும் பாதிக்கும் சர்வதேச வியாபாரமும் வர்த்தகமும், மாகாண வியாபா ரமும் வர்த்தகமும் என்பனவற்றை உட்படுத்து வதாக உள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிப்...

தெரிவித்தார்.

அரியநேத்திரனுக்குத் தன்னாலும், சாணக்கியனாலும் அச்சுறுத்தல் இருப்பதாகப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவர் எழுதியுள்ள கடிதமானது தேர்தல் சட்டங்களை மீறும் ஒரு செயற்பாடாகும். அதன் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்பதை மக்கள் அறிவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியின் பாதுகாப்பிற்கும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தான் அந்தக் கடிதத்தை எழுதி இருப்பார் என்பதை ஊகிக்க முடிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தமிழ்ப் பொதுவேட்பாளருக்கும் இடையில் இருக்கும் தொடர்பு தற்போது அம்பலமாகிக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் இருக்கின்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேர்தல் நேரத்தில் அரியநேத்திரனுக்கு ஆதரவு பெருகுகின்றது என்று குறிப்பிட்டு, அதனால் நானும் சாணக்கியனும் அச்சுறுத்தலாக இருக்கின்றோம் என்றும் கடிதம் மூலம் அறிவிக்கின்றார்.

வாக்கெடுப்புக்கான காலம் அண்மித்து இருக்கையில் இக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரியநேத்திரனுக்கு ஆதரவு பெருகுகின்றது என்று கூறுவதற்குப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு என்ன அதிகாரம் இருக்கின்றது.

இது தேர்தல் சட்டத்தை மீறுகின்ற குற்றமாகும். இது தொடர்பாகத் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு நான் உத்தியோகபூர்வமாக முறைப்பாடொன்றைச் செய்திருக்கின்றேன். ஜனாதிபதியின் அறிவுறுத்தலின்படி பொதுவேட்பாளர் தொடர்பில் அவ்விதமானதொரு பிரமையை உருவாக்குவதற்காகச் செய்யப்பட்ட ஒரு தேர்தல் குற்றச் செயற்பாடே இக்கடிதமாகும்.

அதற்கு எதிரான நடவடிக்கையை நாம் எடுத்துள்ளோம். அதில் தேவையில்லாமல் எங்களுடைய பெயரும் சேர்க்கப்பட்டுள்ளது. அரியநேத்திரனின் பெயர் வேட்பாளராக வருவதற்கு முன்பே தமிழ் வேட்பாளர் என்ற கருத்தியலுக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன்.

அரியநேத்திரனுக்கும் எனக்கும் தனிப்பட்ட விரோதம் எதுவும் இல்லை. இந்த எண்ணக்கரு மிகத் தவறானது. இந்த எண்ணக்கரு தமிழ் மக்களுக்கு ஒரு அபாயமான விடயம். இது தமிழ் மக்களின் அரசியல் தற்கொலைக்கு சமனானது. இதனை நாங்கள் எதிர்க்கின்றோம். தேர்தலில் ஒருவரை எதிர்ப்பது சாதாரண விடயம். இது சகஜமான விடயம். அதைக் கடிதத்தில் எழுத வேண்டிய தேவை இருக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை.

என்னை எல்லோருக்கும் தெரியும். எனக்கும் வன்முறைக்கும் வெகுதூரம் என்பதும் எல்லோருக்கும் தெரியும். உண்மையிலே என்னில் வைக்கப்படும் குற்றச்சாட்டே அதுதான். நான் வன்முறைக்கு ஆதரவாக இல்லை என்பதுதான் என்றார். (ந-7)

## சுமந்திரன்...

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகக் கடிதம்மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. இருந்தாலும் எனக்குத் தற்போது பிரமுகர் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த (MSD) இருவரைப் பாதுகாப்புக்குத் தந்துள்ளார்கள்.

பொது வேட்பாளராக நான் போட்டியிடுவதால் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் இராசமாணிக்கம் சாணக்கியன் போன்றவர்கள் அதிருப்தியில் இருப்பதாகக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்காக அவர்களால் எனக்கு ஆபத்து வரும் என நான் நம்பவில்லை.

அதேவேளை என்னை வேட்பாளரில் இருந்து விலகுமாறு யாரும் என்னிடம் நேரில் கேட்கவில்லை. எனக்கு அந்தவிதமான அழுத்தங்களையும் தரவில்லை. நான் போட்டியிடுவதால் சிலருக்கு உடன்பாடு இல்லாமல் இருக்கலாம். அதற்காக யாரும் எனக்கு அச்சுறுத்தல் விடுக்கவோ, அழுத்தம் தரவோ இல்லை என மேலும் தெரிவித்தார்.

இதேவேளை அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவின் (MSD) ஒன்பது உத்தியோகத்தர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அரியநேத்திரன் இரண்டு பேரை மாத்திரம் கோரியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-7)

## ஒருவர்...

கடற்பரப்பில் இடம்பெற்றது.

இதன்போது கடலில் நீராடியவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்ததுடன் மற்றுமொருவர் காணாமல் போயுள்ளார்.

இதில் வடமராட்சி குடத்தனையைச் சேர்ந்த கந்தசாமி விக்னேஸ்வரன் (வயது-54) என்ற குடும்பஸ்தரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நீரில் மூழ்கியதை அவதானித்த பொதுமக்கள் அவரை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை இரவு 8.30 மணியளவில் நீராடிக்கொண்டிருந்த இளைஞன் ஒருவர் காணாமல் போயுள்ள நிலையில் கடற்படையினர் மற்றும் மீனவர்களின் உதவியுடன் அவரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நுணாவிலைச் சேர்ந்த யாழ். வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியரான தயாரூபன் வைஷ்ணவன் (வயது-28) என்பவரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

மேற்படி இரண்டு சம்பவங்கள் தொடர்பிலும் பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,60)

## ஓமந்...

கரவண்டியில் சென்ற ஒருவருடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது விபத்தில் பலத்த காயமடைந்த இருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

எனினும், அவர்கள் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

[illegible] தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த வட்டக்கச்சி மாயவனூரைச் சேர்ந்த வீரசிங்கம் ஜெனிதரன் (வயது-46) மற்றும் துவிச்சக்கரவண்டியில் பயணித்த ஓமந்தையைச் சேர்ந்த சண்முகம் யோகராசா (வயது-48) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-7,250)

## வாக்காளர்...

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டையை இதுவரை பெறாத அனைவரும் இந்த இணையத்தில் தங்கள் விபரங்களைப் பதிவு செய்து வாக்காளர் அட்டையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்த இணையத்தில் சரியான அடையாளத்தை உறுதிப்படுத்துவதன் ஊடாக தாம் வாக்களிக்க வேண்டிய உத்தியோகபூர்வ வாக்குச் சாவடிகளையும் அறிந்து கொள்ள முடியும் எனத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-7)

மஹஜன சம்பத
திகதி 2024.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 5600
D 0 0 1 4 3 4
அத சம்பத
D 1 4 3 4
சீட்டிழுப்பு இலக்கம் 175

தன நிதானய
திகதி - 2024.09.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1630
X 09 21 40 44 X
19841

மெகா பவர்
திகதி 18/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1948
T 07 29 40 43 55
56315

லக்கி 7 VIP
திகதி 2024.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 426
A 3 9 5 7 1 3 A

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3842
சீட்டிழுப்பு திகதி 18.09.2024
D 18 45 48 62
D
96323

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.18
சீட்டிழுப்பு இலக்கம் 909
மேஷம் 01 11 30 50 மேஷம்
02281
27

உத்தியோகபூர்வ முடிவுகள்
18.09.2024 வெற்றி வாரம் 308 வர்ணம் பச்சை
F 1 6 2 5 4 5
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,265,080.00
64998

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2574 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 18.09.2024 தினம் புதன்கிழமை
24 40 61 73 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,427,385.60

சனிதா
திகதி 2024.09.18 வெற்றி வாரம் 4735
07 31 61 62 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,381,973.20
09714

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4286 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2024.09.18 தினம் புதன்கிழமை
07 13 30 53 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,182,835.20
118071

P 08 21 39 47 63
1750
18.09.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 545,663,234.60

ஜயோதா Jayoda
திகதி 2024.09.18 வெற்றி வாரம் 2061 வர்ணம் மஞ்சள்
04 25 28 66 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,425,048.80

ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் : 2400
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.67,912,884.80
18 49 57 61 G
979383

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



இணுவில் மேற்கு ஞான வைரவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## இரத்தினம் அரசகுமார் (வாணன்)

தோற்றம் 10.04.1979 மறைவு 18.09.2024

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

முருகையா குடும்பம்
இணுவையூர் முருகஜீவ அறக்கட்டளை
யாழ்ப்பாணம் இலங்கை

ஞானவைரவர் கோவிலடி,
இணுவில் மேற்கு,
இணுவில்.

(C-1212)


## வாக்கெடுப்பு...

வாக்கெடுப்பு நிலையங்களுக்குள் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களுக்குள் கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்துதல், நிழற்படம் எடுத்தல், காணொளி எடுத்தல், ஆயுதங்களை வைத்திருத்தல், புகைப்பிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைப்பொருள் பயன்படுத்துதல் மற்றும் மதுபானம் அல்லது போதைப்பொருள் பயன்படுத்தி வருகை தருதல் ஆகிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தேர்தல் சட்டத்தின் பிரகாரம் தடை விதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## ஜனாதிபதி...

வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், சில வேட்பாளர்கள் இன வாதம் சார்ந்த கருத்துக்களினை முன்வைத்த போதிலும் அது பார தூரமான விளைவுகளை ஏற்படுத் தவில்லை.

இம்முறை பொருளாதாரம் உள்ளிட்ட ஆரோக்கியமான கருப்பொருட்களே விவாதங்களில் பயன் படுத்தப்பட்டுள்ளன. இதுவே நாட்டின் வளர்ச்சிக்கான அடிப்படை என்றார். (ந-7)

## மாவிட்டபுரம்...

தில் மதுபானசாலை அமைப்பதை அனுமதிக்க முடியாதெனக் கருத்துரைத்த அப்பகுதி மக்கள்,

புனித வழிபாட்டுத் தலங்கள் உள்ள குறித்த பிரதேசத்தில் மதுபான சாலை அமைப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனுமதி வழங்கக்கூடாதெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1211)

076 825 7716 (ஆகாஸ்)

## மேசன் தேவை

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் மேசன் கட்டுமான வேலைகளுக்கு ஆள் தேவை. நாள் கூலியாகவோ சப்கொன்றக்காகவோ வேலை செய்யலாம். பொருத்தமானவர்கள் தொடர்பு கொள்ளவும்.

077 433 4820

(1976)

## விற்பனைக்கு

அல்லைப்பிட்டி 2ம் வட்டாரத்தில் கடற்கரை முகப்புடன் கூடிய 10 ஏக்கர் (160 பரப்பு) காணியில் அமைந்த மாடி வீடும் நன்னீர்க் கிணறும் 1500 றகும் மேற்பட்ட தென்னங்கன்றுகளுடன் மின்சார வசதியுடன் காணி விற்பனைக்குண்டு.

(1973)

தொடர்புகளுக்கு:
077 723 2535

## வேலையாள் தேவை

வீட்டில் தங்கிநின்று பணிபுரிவதற்கு 45 வயதிற்கு மேற்பட்ட பெண் ஒருவர் தேவை.

(1972)

தொடர்புகளுக்கு:
077 073 5931

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகர் அதை அண்டிய பகுதிகளில் நான்கு/ஐந்து அறைகள் உடைய விசாலமான வீடு தேவை.

(1975)

தொடர்புகளுக்கு: 077 711 1999

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

யாழ். பிறவுண் வீதியிலுள்ள வீடு ஒன்றிற்கு தங்கியிருந்து கிளீனிங் வேலை செய்யக்கூடிய ஆண் வேலையாள் தேவை.

சம்பளம் - 45,000/=

தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும்.

(1975)

தொடர்புகளுக்கு: 077 711 1999



31 ஆம் நாள்

# நினைவு அஞ்சலி நிகழ்வு அழைப்பு

இரங்கல் உளமுடையீர்!



எங்கள் அன்பு நிறை குடும்பத் தலைவி

## திருமதி தெய்வா கந்தசாமி (சுகாதார உதவியாளர்)

அவர்களின்

வாழ்வு நிறைந்து இயற்கையுடன் கலந்த

31 ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வு

19.09.2024 இன்று வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில்

சாமியன் அரசடிச் சந்தி, கரவெட்டியிலுள்ள **தேவா மணி மண்டபத்தில்** நடைபெறும்.

இந்நிகழ்வில் கலந்து

**தெய்வா** நினைவாக வழங்கப்படும் நண்பகல் உணவினையும் ஏற்று

எம்மைத் தேற்றிச் செல்லுமாறு வேண்டி அழைக்கிறோம்.

(352)

நிரந்தர முகவரி:
“பெரிய தாய் அகம்”,
இடைக்குறிச்சி, வரணி.

தகவல் :
குடும்பத்தினர்

தற்காலிக முகவரி:
மரக்காலை ஒழுங்கை,
சாமியன் அரசடி, கரவெட்டி.



## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

1%

- Visit visa
- Student visa
- Fixed & saving
- லட்சத்திற்கு 1000 மட்டுமே

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு:

(1908)

075 033 6759

## இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்

யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்

42,500/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(353)

APEX TRAVELS

0777 597 598, 076 3333 644

இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)

## V2 VISA SERVICES

கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-1209)

## இரண்டாம் மொழி சிங்கள வகுப்புக்கள்

2025. தரம் 6 மாணவர்களுக்கான இரண்டாம் மொழி சிங்களம் அடிப் படையில் இருந்து கற்பிக்கப் படும்.

ஆரம்பம் :- 23.09.2024

நேரம் :- மாலை 3.00 மணி

இடம் :- இலங்கை வேந்தன் திருமண மண்டபம் அருகில். நீராவியடி, யாழ்ப்பாணம்.

(1960)

தரம் 6,7,8,9,10,11 வகுப்புக்கள் நடைபெறும்.

தொடர்புகளுக்கு:
077 214 0220
077 990 6867

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15’000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.

(C-1209)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்தியில் இருந்து புகையிரத நிலையத்துக்கு செல்லும் வீதியின் ஓரமாக 2 ½ பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

(1957)

076 742 4301, 075 710 9639

Easy Real Estate


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.